# சட்டப் பேரவைத் தேர்தல் அறிக்கை 2011



திராவிட முன்னேற்றக் கழகம்

# தி.மு.க. தேர்தல் அறிக்கை – 2011


| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | .. | 7 |
| 2. | திராவிட இயக்க வரலாறு – சமூக நீதி | .. | 7 |
| 3. | மாநில சுயாட்சி | .. | 10 |
| 4. | உச்ச நீதி மன்றத்தின் அதிகாரப் பரவல் | .. | 11 |
| 5. | மாநிலப் பட்டியலில் கல்வி | .. | 11 |
| 6. | நதிகள் தேசிய மயம் | .. | 12 |
| 7. | மாநிலங்களுக்கு நிதி பகிர்வு | .. | 12 |
| 8. | மொழிக் கொள்கை | .. | 13 |
| 9. | ஈழத் தமிழர் பிரச்சினை | .. | 14 |
| 10. | மாநிலத்தில் வேளாண் உற்பத்தி | .. | 14 |
| 11. | விளைநிலங்கள் பாதுகாப்பு | .. | 16 |
| 12. | வேலைவாய்ப்பு | .. | 17 |
| 13. | மக்களுக்கு நெருக்கமான நிர்வாகம் | .. | 18 |
| 14. | வறுமை ஒழிப்பு | .. | 18 |
| 15. | தடையில்லா மின்சாரம் | .. | 19 |
| 16. | அத்திக்கடவு – அவினாசி திட்டம் | .. | 20 |
| 17. | நீர்வள மேம்பாட்டுத் திட்டம் | .. | 20 |
| 18. | மீனவர் நலன் | .. | 20 |
| 19. | கச்சத் தீவு | .. | 21 |
| 20. | கால்நடை வளம் | .. | 22 |
| 21. | மக்கள் நல்வாழ்வு | .. | 22 |
| 22. | கலைஞர் காப்பீட்டுத் திட்டம் | .. | 24 |
| 23. | பள்ளிக் கல்வி | .. | 24 |

| | | | |
|---|---|---|---|
| 24. | உயர் கல்வி | .. | 25 |
| 25. | மருத்துவக் கல்வி | .. | 27 |
| 26. | தொழில்கள் | .. | 27 |
| 27. | சேதுக் கால்வாய்த் திட்டம் | .. | 27 |
| 28. | போக்குவரத்து | .. | 28 |
| 29. | மூத்த குடிமக்களுக்கு இலவசப் பேருந்து | .. | 29 |
| 30. | நெசவாளர் நலன் | .. | 30 |
| 31. | சாயப்பட்டறை பிரச்சினை | .. | 31 |
| 32. | சிறுபான்மையர் நலன் | .. | 31 |
| 33. | ஆதிதிராவிடர் நலன் | .. | 32 |
| 34. | வணிகர் நலன் | .. | 34 |
| 35. | கலைஞர் வீடு வழங்கும் திட்டம். | .. | 34 |
| 36. | மாற்றுத் திறனாளிகள் நலன் | .. | 36 |
| 37. | பெருநகர மேம்பாட்டுத் திட்டம் | .. | 36 |
| 38. | திருக்கோயில் நிலங்கள் | .. | 37 |
| 39. | அரசு அலுவலர் நலன் | .. | 37 |
| 40. | பொது விநியோகத் திட்டம் | .. | 38 |
| 41. | கடத்தலை ஒழித்தல் | .. | 39 |
| 42. | பனை, தென்னை விவசாயிகள் நலன் | .. | 39 |
| 43. | முன்னாள் ராணுவத்தினர் நலன் | .. | 39 |
| 44. | சுற்றுலா வளர்ச்சி | .. | 40 |
| 45. | நலத் திட்ட உதவிகள் | .. | 40 |
| 46. | இணைப்பு – சாதனைகள் | .. | 41 |
| 47. | முடிவுரை | .. | 60 |

# தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியீட்டு விழாவின்போது தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை – 19.3.2011

சட்டப் பேரவை பொதுத் தேர்தல்–திராவிட முன்னேற்றக் கழக அறிக்கை வெளியீட்டு விழாவில் சிறியதோர் ஆனால் அரியதோர் உரையை நிகழ்த்திய இனமானப் பேராசிரியர் அவர்களே, தமிழர் தலைவர் இளவல் வீரமணி அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் வருகை தந்துள்ள அருமை நண்பர் ஞானதேசிகன் எம்.பி அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வருகை தந்துள்ள தம்பி வேல்முருகன் எம்.எல்.ஏ. அவர்களே, ஏ.கே.மூர்த்தி அவர்களே, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் என்னரும் நண்பர் தொல்.திருமாவளவன் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியினுடைய தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களே, கொங்கு நாடு முன்னேற்றக் கழகத் தலைவர் பெஸ்ட் ராமசாமி அவர்களே, பெருந்தலைவர் மக்கள் கட்சியின் தலைவர் என்.ஆர்.தனபாலன் அவர்களே, உழவர் உழைப்பாளர் கட்சித் தலைவர் செல்லமுத்து அவர்களே, தேசிய லீக் கட்சியின் தலைவர் பஷிர் அவர்களே, இந்திய சமூக நீதி இயக்கத் தலைவர் பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களே, சிறுபான்மை சமூக புரட்சி இயக்கத்தின் தலைவர் லியாகத் அலிகான் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாக இயந்திரத்தை இயக்குகின்ற அன்புக்குரிய நண்பர்களே, பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலின் அவர்களே, முதன்மைச் செயலாளர்அருமை நண்பர் ஆர்க்காட்டார் அவர்களே, அருமைத் தம்பி துரைமுருகன் அவர்களே, பரிதி இளம்வழுதி அவர்களே, திருமதி எஸ்.பி.சற்குணபாண்டியன் அவர்களே, அனைத்து தோழமைக் கட்சிகளையும் சேர்ந்த முன்னணி நண்பர்களே,

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே,

வணக்கம். 14வது சட்டப் பேரவை தேர்தலுக்கான அறிக்கையினை வெளியிடுகின்ற நேரத்தில் முன்கூட்டி சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

வாக்குறுதிகளிலேயே சிறந்த வாக்குறுதி – காப்பாற்ற வேண்டிய வாக்குறுதி – தேர்தல் வாக்குறுதி என்பதை அனைவரும் அறிவீர்கள். அதனால் தான் சில வாக்குறுதிகளை "காற்றிலே பறக்க விடப்பட்ட வாக்குறுதிகள்" என்று கேலி பேசுகிற நிலை இருப்பதையும் நாமனைவரும் நன்கறிவோம். அத்தகைய வாக்குறுதிகளாக திராவிட முன்னேற்றக் கழகம் வழங்குகிற வாக்குறுதிகள் ஆகி விடக் கூடாது என்பதற்காகவும் – அத்தகைய வாக்குறுதிகளை வழங்கி, அதை நிறைவேற்ற முடியாமல் ஆகி விடக் கூடாது என்பதற்காகவும் – அவ்வாறு ஆகாது என்பதற்காகவும் தான் – "சொன்னதைச் செய்வோம் – செய்வதைச் சொல்வோம்" என்று திட்டவட்டமாகக் கூறுவதை திராவிட முன்னேற்றக் கழகம் கடைப்பிடித்து வருகிற வாக்குறுதியாகக் கொண்டுள்ளது.

கடந்த தேர்தல்களின் போது வெளியிட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டோம் என்று நெஞ்சை நிமிர்த்தி கூற இயலாதவாறு நிறைவேறாமல் எஞ்சியிருக்கும் வாக்குறுதிகளும் உண்டு. உதாரணமாக காவிரிப் பிரச்சினை – முல்லைப் பெரியாறு – சேது சமுத்திரத் திட்டம் – கச்சத் தீவு மீட்பு போன்ற இவை அனைத்தும் ஆட்சியாளர்களாகிய எங்களின் தாமதத்தாலோ அல்லது அக்கறையின்மை யாலோ இன்னும் நிறைவேறாமல் இருப்பவை அல்ல! இவைகள் மாத்திரமல்லாமல் – தமிழகத்தில் கடந்த தேர்தலில் நாங்கள் வழங்கிய கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் வாக்குறுதி கூட முற்றாக முடிவடையாமல் – முட்டுக்கட்டையாக இருப்பது வழக்குகள் – நீதி மன்றங்களிலே முடிவடையாமல் இருப்பது தான் என்பதை வாக்காளப் பெருமக்கள் நன்கறிவார்கள்.

எனவே சொல்வதைச் செய்வோம் என்ற உறுதி மொழி சிலவற்றில் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு இந்த அரசு மீது யாரும் குற்றம் கூறிவிட முடியாது.

முட்டுக்கட்டைகள் போடப்பட்டு ஓடாமல் நிற்கும் தேர் – அந்த முட்டுக்கட்டை அகற்றப்பட்டால் – மக்களின் மகிழ்ச்சி வெள்ளத்திற்கிடையே அசைந்தாடி ஊர்ந்து ஓடுவதைக் காண முடிகிறதல்லவா; அது போலத் தான் தவிர்க்க முடியாததும் சட்ட ரீதியாக தேவைப்படுவது மான நீதி மன்றங்களின் தலையீடுகளால் – காவிரியானாலும் – பெரியாறு அணை ஆனாலும் – சேது சமுத்திரத் திட்டமானாலும் – இவற்றை யெல்லாம் விரைந்து நிறைவேற்ற முடியாத நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை அறிவுத் தெளிவுடையோர் எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். எனவே இவ்வாறு தவிர்க்க முடியாத தாமதத்தால் தயங்கி நிற்கும் திட்டங்களை யெல்லாம் இந்த அரசு தட்டிக் கழித்து விட்ட திட்டங்கள் என்று கருதி – நாங்கள் தேர்தல் அறிக்கையிலே கொடுத்த வாக்குறுதிகளை "காற்றிலே பறக்க விட்ட வாக்குறுதிகள்" என்று யாரும் கருதத் தேவையில்லை.

இன்றில்லாவிட்டால் நாளை – நாளை தவறினால் நாளை மறுநாள் – என்றோ ஒரு நாள் எப்படியும் நிறைவேற்றப்படக் கூடிய வாக்குறுதிகளைத் தான் திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் கூட்டணியிலே உள்ள கட்சிகளும் வழங்குகின்றன என்ற நம்பிக்கையோடு இந்த அறிக்கையிலே காணும் திட்டங்களுக்கும் அறிவிப்பு களுக்கும் உங்கள் மனமார்ந்த வரவேற்பையும் – வாழ்த்துகளையும் வழங்குவீர்கள் என்று எதிர்பார்த்து–

ஏழையெளியோர் – சாதாரண, சாமான்ய மக்கள் – பட்டினங்களிலே வாழ்வோர் முதல் பட்டிக்காட்டிலே இருப்போர் வரை அனைவரும் எங்களை

**உங்களுக்காக உழைப்பவர்கள் – ஊரை வாழ வைப்பவர்கள் – உலகம் போற்றும் உத்தமர்கள் வழி நடப்பவர்கள் என்று கருதி–**

**உங்கள் வீட்டுப் பிள்ளைகளாம் எங்களை – உங்களுக்காகப் பணியாற்ற உத்தரவிடுங்கள் என்று இந்தத் தேர்தல் அறிக்கையை வழங்குகின்ற நேரத்தில் – வணங்கி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.**

*   *   *

# சட்டப் பேரவைத் தேர்தல்

## 2011

## தி.மு.க. தேர்தல் அறிக்கை

### என் உயிரினும் மேலான தமிழ்ப் பெருமக்களே!

நமது திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்த தேர்தல்களின் போது உங்கள் கட்டளையையேற்று களம் புகுந்த நேரத்தில் எல்லாம் – உங்கள் கால் மலர்களில் வைத்த தேர்தல் அறிக்கைகளில் "சொன்னதைச் செய்வோம் – செய்வதைச் சொல்வோம்" என்று நான் குறிப்பிட்டிருந்தேன். அந்த வாசகத்தையொட்டி இந்தச் சட்டமன்றத் தேர்தலிலும் பிறிதொரு வாய்மை நிறை வாசகமாக இதோ "செய்ததைச் சொல்லி – அவற்றைத் தொடர்ந்து இனி செய்யப் போவதையும் விளக்குகிற அறிக்கை"யாக இந்த உறுதிமொழி அறிக்கையை உங்கள் பாதார விந்தங்களில் வைத்து வணங்குகிறேன்.

இளங்குருத்துப் பருவத்தில் பொது வாழ்வைத் தொடங்கி சமூகம் – பொருளாதாரம் – அரசியல் மற்றும் கலை இலக்கியம் என பல துறைகளிலும் பணியாற்றிப் பாடுபட்டு என் வாழ்வின் ஒவ்வொரு துளியும் என் உயிரினும் மேலான தமிழ் மக்களாம் உங்களுக்காகவே எஞ்சிய நாட்களையும் செலவிடத் தயாராக இருக்கிற நான் கடந்த தேர்தல்கள் பலவற்றில் "சொல்வதைச் செய்வோம்" என்று உறுதிமொழி அளித்து அந்த உறுதிமொழிகளை இயன்ற வரையில் நிறைவேற்றி வந்திருக்கிறேன். அதனால் இதுவரையில் சொன்னதைச் செய்தோம் – என்பவைகளை பட்டியலிட்டு – இனியும் செய்வதற்கான உறுதிமொழிகளை இணைத்து – இந்தத் தேர்தல் அறிக்கையை வெளியிடுகின்றேன்.

தமிழர்களின் நெஞ்சத்தில் என்றும் நீங்கா இடம் பெற்று இன உணர்வின் ஏந்தலாக, திராவிட இயக்கத்தின் ஒப்பற்றத் தலைவராக, கொள்கைக் குன்றமாக, அறிவின் களஞ்சியமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தை வழிநடத்தும் ஆற்றலின் பேருருவாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் நோக்கி, நன்றியைக் குவித்து, வீரவணக்கத்தைச் செலுத்தி, திமுக இத்தேர்தல் அறிக்கையை மக்கள் முன் வைக்கிறது. திராவிட இயக்கத்தின் மேதை நம் நினைவில் வாழும் சிந்தனையாளர் தம்பி முரசொலி மாறன் தேர்தல் அறிக்கையை உருவாக்கும் பாங்கினைப் பசுமையாக நினைவுகூர்ந்து,அவர் நெறி நின்று, சமூக நீதியோடு கூடிய, வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து செல்வதற்கான உயர் நோக்கம் கொண்ட செயல்திட்டங்களை இணைத்து மக்களின் ஆதரவினை நாடி இத்தேர்தல் அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில்தான் எடுத்துக்காட்டான முறையில் சமூக நீதிக் கொள்கை நீடித்த வெற்றி பெறுவதற்கும், சமூக சீர்திருத்தக் கொள்கைகளும், சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு, எளிய மக்கள் ஏற்றம் பெறுவதற்கும் அடித்தளம் அமைத்தது 1916இல் உருவான தென்னிந்திய நலவுரிமைச் சங்கமான நீதிக்கட்சியாகும். அதன் ஒப்பற்றத் தலைவர்களான டாக்டர் நடேசனார், சர்.பி.டி.தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் ஆகியோரின் அளப்பரியப் பணிகளை இத்தருணத்தில் தி.மு.கழகம் நினைவுகூர்கிறது. தந்தை பெரியார், காங்கிரசுப் பேரியக்கத்தில் எண்ணற்ற தியாகங்களைப் புரிந்து, சாதி ஆதிக்கத்தை எதிர்த்து 1925இல் சுயமரியாதை இயக்கத்தையும், பகுத்தறிவு இயக்கத்தையும் தொடங்கி தமிழர்கள் விழிப்புறவும் தன்மானம் பெற்றிடவும் வழிவகுத்தார். 1938இல் கட்டாய இந்திக்குக் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து களம் கண்டு வெற்றி பெற்ற தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் தமிழ் மக்களின் மீது திணிக்கப்பட்ட சமூக இழிவுகளை எதிர்த்துப் போராடுவதற்கு 1944இல் நீதிக்கட்சியைச் சாமான்யர்களின்

இயக்கமாக மாற்றி ‘திராவிடர் கழகம்’ எனும் பெயரிட்டு மாபெரும் சமூகப் புரட்சிக்கு அடித்தளம் அமைத்தனர்.

பகுத்தறிவு நெறிகளையும், தமிழர் உரிமைகளையும் போற்றி, மக்களாட்சி நெறி முறைகளுக்கு இலக்கணமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கத்தை 1949இல் பேரறிஞர் அண்ணா உருவாக்கினார். தொன்மைமிக்க தமிழ்மரபினையும், தமிழ்நாட்டு உரிமைகளையும் நிலைநாட்டிய, அறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பேரியக்கத்தை மக்கள் இயக்கமாகப் பாதுகாத்து, சமத்துவ, சமதர்ம, சமூக நீதிக்கொள்கைகளைக் கடைபிடித்து 75 ஆண்டுகளாக எனது அளப்பரிய அரசியல் பணிகளை பேராசிரியப் பெருந்தகை போன்றோரின் ஒத்துழைப்போடு ஓய்வின்றி ஆற்றி வருகிறேன். கழக ஆட்சி அமைந்த காலங்களிலெல்லாம் மக்கள் நலனைப் போற்றும் பல முன்னோடியான சமூகப் பொருளாதாரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, சமுதாயச் சீர்திருத்தத்திற்கான முற்போக்குச் சட்டங்கள் இயற்றப்பட்டு, தமிழ்நாடு, இந்திய மாநிலங்களிலேயே எடுத்துக் காட்டான ஒரு சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது.

ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று, பொருளாதாரக் கூறுகளைச் செம்மைப்படுத்தி, வளமிக்கத் தமிழகத்தை உருவாக்குவதில் தி.மு.க. ஆற்றி வருகின்ற பணிகள் எண்ணிலடங்கா. இந்தியாவில் “அரசியல் நிலைத்தத் தன்மை” (Political Stability) பாதிப்புக்குள்ளாகிய காலங்களில் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவினை அளித்து மத்தியில் ஒரு நிலையான ஆட்சியை உருவாக்குவதற்குத் தொடர்ந்து தனது மாபெரும் பங்களிப்பை அளித்து வருகிறது.

2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசுக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) உருவாவதற்கு தி.மு.கழகம்தான் முதலில் முன்வந்தது. ஜனநாயக முற்போக்குக் கூட்டணி

தமிழகத்திலும், புதுவையிலும் 40 இடங்களை வென்று ஆக்கப்பூர்வமான அரசியல் சாதனையைப் படைத்தது. நமது தாய்மொழியாம் தமிழுக்குச் செம்மொழித் தகுதியை மத்திய அரசு முதன்முதலில் நமது வலியுறுத்தலின் காரணமாக வழங்கியது. சென்னையில் செம்மொழி ஆய்வு மையம் அமைக்கப்பட்டு தமிழ் வளர்ச்சிப் பணிகள் தொடர்கின்றன. இவ்வாறாக, தமிழ்நாடு விரைந்த பொருளாதார வளர்ச்சியை எட்டவும், தமிழக மக்கள் பயன்பெறவும் 2004ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசில் திமுக இடம்பெற்று நிறைவேற்றிய முத்திரை பதித்த திட்டங்களும்; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த காலங்களில் தமிழக பொருளாதாரம் சீரான முறையில் வளர்வதற்கும், தமிழக மக்களின் வாழ்நிலை உயர்வதற்கும் அளித்த திட்டங்களும்; இந்த அறிக்கையின் பிற்பகுதி இணைப்பில் விரிவாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு உயர் வளர்ச்சியை அடைவதற்கு 2006 சட்டமன்றத் தேர்தலில் திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. "தேர்தல் காலத்தில் இத்திட்டங்கள் எல்லாம் வெறும் அறிவிப்புகள்தான், நிறைவேற்ற முடியாது" என்ற பொய் பரப்புரை முறியடிக்கப்பட்டு, சமூகப் பொருளாதாரத் திட்டங்களையும், மக்கள் நலன் பேணும் திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றி பெரும் சாதனைகளை தி.மு.கழக அரசு படைத்துள்ளது.

## மாநில சுயாட்சி

2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்த போது மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று திமுக வலியுறுத்தியதன் காரணமாக 2007இல் மத்திய–மாநில அரசுகளின் உறவுகளைச் சீரமைப்பதற்காக நீதிபதி பூஞ்சி தலைமையில் மத்திய அரசு ஒரு ஆணையத்தை நியமித்த போது, திராவிட முன்னேற்றக் கழக அரசு அவ்வாணையத்திற்கு உரிய

பதில்களையும் பரிந்துரைகளையும், வல்லுநர் குழு அமைத்து தமிழக அரசின் சார்பில் அனுப்பியுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்களின் இறுதி விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் 1969இல் நீதிபதி இராசமன்னார் தலைமையில் மத்திய–மாநில உறவுகளை ஆய்வதற்கு ஒரு வல்லுநர் குழுவை அமைத்தோம். அவ்வல்லுநர் குழுவின் பரிந்துரைகளையும், மத்திய அரசால் 1983ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட நீதிபதி சர்க்காரியா குழுவின் பரிந்துரைகளையும், 2000ஆம் ஆண்டில் நீதிபதி வெங்கடாசலய்யா குழு அளித்த பரிந்துரைகளையும் முழுமையான விவாதத்திற்கு உட்படுத்தி மாநிலங்கள் சுயாட்சி பெறுவதற்கான அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

## உச்சநீதிமன்றத்தின் அதிகாரங்களைப் பரவலாக்கல்

இந்திய உச்சநீதி மன்றத்தின் அதிகாரங்களைப் பரவலாக்கிடும் நோக்கத்துடன் புது தில்லியில் ஒரு உச்சநீதிமன்றம், மண்டல அளவிலான மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் (Four Regional Courts of Appeal) நாட்டின் நான்கு பகுதிகளிலும் உருவாக்கப்பட வேண்டும் என்று பல சட்ட வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். எனவே, மத்திய அரசு உடனடியாக இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து தமிழ்நாட்டில் மேல் முறையீட்டு நீதிமன்றம் ஒன்றினை அமைத்திட வேண்டும் என திமுக தொடர்ந்து வலியுறுத்தும்.

## மாநிலப் பட்டியலில் கல்வி

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட கோத்தாரிக் குழுவும், பல கல்வி வல்லுநர்களும் வலியுறுத்துகிறபடி கல்வியை மாநில அரசின் பட்டியலிலேயே மீண்டும் சேர்ப்பதற்கு உரிய அரசமைப்புச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென வலியுறுத்துவோம்.

கிராமப்புற ஏழை, எளியக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் இட ஒதுக்கீட்டின் பயனை முழுமையாகப் பெற்று உயர்வதற்கு ஏதுவாக, நுழைவுத் தேர்வை எக்காலத்திலும் நடைமுறைப்படுத்தக் கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்துவோம்.

## நதிகள் தேசியமயம்

மாநிலங்களுக்கிடையிலான நதிகளை தேசியமயமாக்குவது மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் இருப்பதாக அரசமைப்புச் சட்டம், மத்தியப் பட்டியலில் 56ஆவது பதிவில் காணப்படுகிறது. மாநிலங்களுக்கிடையே நீண்டகாலமாக நிலவிவரும் நதிநீர் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு, நதிகளை தேசியமயமாக்குவது மட்டுமே நீண்டகாலத் தீர்வாக அமையும் என்பதால், அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துவோம்.

முதற்கட்டமாக, வருகின்ற 12ஆம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் தென்னக நதிகளை இணைப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவோம். இவ்வகையான பாசனத் திட்டங்களை மத்திய அரசின் திட்டங்களாக ஏற்று முழு நிதியுதவிகளை மாநிலங்களுக்கு வழங்கிட வேண்டுமெனக் கோருவோம்.

## மாநிலங்களுக்கு நிதிப்பகிர்வு

நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்குக் கிடைத்து வருகிற வரிவருவாய் மற்றும் மானியத்தொகையின் பங்கு, 7ஆவது நிதிக்குழுக்காலத்தில் 8 விழுக்காட்டிற்கு மேல் இருந்து; படிப்படியாகக் குறைந்து, இன்று 12ஆம் நிதிக்குழுக் காலத்தில் 5.3 விழுக்காடாக ஆகியுள்ளது. இது 13ஆம் நிதிக்குழுக் காலத்தில் மேலும் குறைந்து 4.9 விழுக்காடாக உள்ளது. வேகமாக பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுவரும் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு நிதித்

தொகுப்பிலிருந்து அதன் பங்கு குறைந்து வருவதால் மாநிலத்தின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கிறது. எனவே, வருகின்ற ஆண்டுகளில் இம்முறையை மாற்றி, சிறப்பாக செயல்படும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பாதிக்கப்படாத வகையில் நியாயமான முறையில் உரிய நிதி ஒதுக்கீடு தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

## மொழிக் கொள்கை

தி.மு.கழகத்தின் விடாமுயற்சியின் காரணமாக தமிழ் மொழி மத்திய அரசால் செம்மொழி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், செம்மொழியான தமிழ், மத்திய ஆட்சி மொழியாக இன்றளவும் இடம் பெறவில்லை. அறிஞர் அண்ணா காலத்தில் இருந்து அனைத்து தேசிய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக்க வேண்டும் என்றும், அவ்வகை அணுகுமுறைதான் மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்றும் திமுக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. எனவே, செம்மொழியாம் தமிழை மத்திய அரசின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துவோம்.

உயர்நீதிமன்றம் உட்பட அனைத்து நீதிமன்றங்களிலும் தமிழ் மொழியை நீதிமன்ற மொழியாக அறிவிப்பதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவோம்.

திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க பாடுபடுவோம்.

மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படும் அனைத்துப் பணிகளுக்கான தேர்வுகளையும் தமிழ்மொழியிலும் எழுதுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று வலியுறுத்துவோம்.

## ஈழத்தமிழர் பிரச்சினை

ஈழத்தமிழர்களுக்கு; சிங்களவர்களுக்குச் சமமான உரிமையையும், ஆட்சியியலில் சமபங்கினையும் அளித்து ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திமுக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும் ஈழத்தமிழர்கள் அமைதியான சூழலில் வாழ்வதற்குரிய உறுதியான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்வதற்கு தீவிரமான முயற்சிகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துவோம்.

## மாநிலத்தில் வேளாண் உற்பத்தி

தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கிட தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் அமைப்புகளுக்குச் சிறப்பு நிதியுதவி அளித்து பொருள் ஈட்டுக் கடன் உதவியுடன் வேளாண் பொருள்கள் சேமிப்பதற்காக தனியே கிடங்குகள் அமைத்திடுவோம்.

விவசாயிகளின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக நெல் பயறு வகைகள் போன்ற உணவுப் பொருள்கள் – கரும்பு, பருத்தி போன்ற பணப் பயிர்கள் – காய்கறிகள் – பழங்கள் – மலர்கள் போன்றவற்றின் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து சிறப்பு திட்டம் ஒன்றை செயல்படுத்துவோம்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களை மையமாகக் கொண்டு விவசாய விரிவாக்க அமைப்புகளை ஏற்படுத்துவோம்.

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் தோறும் விவசாய சேவை மையங்கள் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வேளாண் உற்பத்தி இயந்திரங்கள் நியாயமான வாடகைக்குக் கிடைக்க வழி வகை செய்வோம்.

**வேளாண் உற்பத்திக் கருவிகளுக்கான வங்கி** (Bank for Agricultural Production Implements-BAPI) **ஒன்றிய அளவில்** (Block level) **அமைத்திடுவோம்.**

**விவசாய உற்பத்திக் கருவிகளை உருவாக்கிட தனி தொழிற்பேட்டை அமைத்திடுவோம்.**

**வேளாண்மை மாநில அரசின் கொள்கைப் பட்டியலில் வருகிறது. மத்திய அரசு பன்னாட்டு நிறுவனங்களின் மரபணு மாற்றுத் தொழில் நுட்பத்தை இந்தியாவில் புகுத்த மேற்கொண்டு வரும் முயற்சிகளை அனுமதிக்க இயலாது என கர்நாடகா, கேரளா, உத்தராஞ்சல் மாநில அரசுகள் அறிவித்துள்ளதைப் போல தமிழகத்திலும் அறிவிப்போம்.**

**இயற்கை வேளாண்மைக்கு வேளாண் துறையில் தனியாக ஒரு பிரிவை உருவாக்கி அந்த இயற்கை விவசாயிகளுக்கு உரிய மானியம் வழங்குவோம்.**

**விவசாய சுயஉதவிக் குழுக்கள் மூலம் சிறு, குறு விவசாயிகள் உயர் தொழில் நுட்பத்தைப் பின்பற்ற ரூபாய் பத்தாயிரம் சுழல் நிதி; மானியமாகவும், மேலும் கடன் உதவியும் வழங்குவோம்.**

**வட்டியில்லாப் பயிர்க் கடன் வழங்குவது போல், சொட்டுநீர்ப் பாசனம், போன்ற விவசாய மூலதனப் பணிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வட்டியில்லாக் கடன் வழங்குவோம்.**

**கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் சந்தை வசதிகள் நவீனமயமாக்கப்பட்டு சேமிப்பு கிட்டங்கிகள், குளிர்பதன சேமிப்பு வசதிகளை ஏற்படுத்துவோம்.**

**உழவர் சந்தைகளை ஏற்படுத்தியது போல நகர்ப் புறங்களில் நுகர்வோர் சந்தைகள் அமைக்கப்பட்டு உற்பத்தி மையங்களிலிருந்து நேரடியாக காய்கறி போன்ற வேளாண் பொருள்கள் நகர்ப்புற மக்களுக்குக் கிடைக்க நடவடிக்கை**

எடுப்போம். நகர்ப்புற நுகர்வோர் நியாயமான விலையில் பொருள்களைப் பெறவும், விவசாயிகள் போதுமான இலாபத்தை ஈட்டவும் "பச்சை நிற ஊர்திகள்" மூலம் நடமாடும் விற்பனை மையங்களை செயற்படுத்துவோம்.

ஒப்பந்தப் பண்ணை முறை மூலம் உணவு பதப்படுத்தப்படும் தொழிற்சாலைகளை கிராமப் புறங்களில் அமைக்க ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவோம். இத்தகைய தொழில் மையங்களுக்கு ஐந்தாண்டுகள் வரை முழு விற்பனை வரி மான்யம் வழங்குவோம்.

நெல், கரும்பு, பருப்பு வகைகள் போன்றவற்றுக்கும் தானிய வகைகளுக்கும் நியாயமான உற்பத்தி செலவின் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுப்போம்.

## விளைநிலங்கள் பாதுகாப்பு

விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் வகையில், உரிய அனுமதி பெறாமல் விளை நிலங்களை வேறு பயன்பாட்டிற்கு மாற்றுவதைத் தடுக்க தக்க நடவடிக்கை மேற்கொண்டு, விளை நிலங்களைப் பாதுகாப்போம்.

டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கும் வைக்கோலைப் பயன்படுத்தி, குறைந்த முதலீட்டில் எளிமையான தொழில்நுட்பத்தைக் கொண்டு உயர்ரக புரதச்சத்தினை அளிக்கும் காளான்களை உற்பத்தி செய்ய ஒரு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்.

சொட்டு நீர்ப்பாசன முறையை ஊக்குவிப்பதற்காகத் தற்போது அளித்து வரும் 65 விழுக்காட்டு மானியம் சிறு குறு விவசாயிகளுக்கு 90 விழுக்காடாக உயர்த்தப்பட்டு, மானியத் தொகையை விவசாயிகளிடம் நேரடியாக அளிப்போம்.

விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடனாகப் பெற்று; வசூலிக்க இயலாத பண்ணை சாராத கடன், கடனுக்கான வட்டி, ஆகியவற்றை படிப்படியாகத் தள்ளுபடி செய்வோம்.

இலவச மின்சாரத்தை தென்னை வளர்ப்பு, தோட்டக்கலை பயிர்களுக்கும், மரவகை பயிர்களுக்கும் விரிவுபடுத்துவோம்.

வனவிலங்குகளினால் உயிரிழக்கும் விவசாயிகளுக்கு தற்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை ஒரு இலட்சம் ரூபாயை இரண்டு இலட்சமாக உயர்த்துவோம்.

மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியத்தில் தமிழ்நாட்டு தென்னை விவசாயிகள் வாரியத்திற்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று வலியுறுத்துவோம்.

தமிழகத்தில் பருவ காலங்களில் விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களுக்குத் தேவையான இடுபொருட்கள் அனைத்தும், அந்தந்த கிராமங்களுக்கு நடமாடும் "உழவர் நண்பன் ஊர்திகளில்" எடுத்துச் சென்று இடுபொருட்களை அரசு மான்ய விலையில், உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கி, விவசாயிகளின் தோழனாக செயல்படுவோம்.

## வேலைவாய்ப்பு

படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்குத் தேவையான தகுதியை உருவாக்க மாவட்டம் தோறும் சிறப்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். வேலை வாய்ப்புகள் உள்ள தொழில்களுக்கு உரிய பயிற்சிகளை தொழில் நிறுவனங்களோடு இணைந்து இந்த மையங்களின் வாயிலாக வழங்குவோம்.

## மக்களுக்கு நெருக்கமான நிர்வாகம்

அரசின் பல்வேறு துறைகள் வழங்கும் சேவைகளை ஒருமுகப்படுத்தி அவற்றை பொது மக்கள் எளிதாகப் பெறத்தக்க வகையில் கிராமப்புறங்களில் வட்ட அளவிலும், நகர்ப்புறங்களில் கோட்ட அளவிலும் பொதுமக்கள் சேவை மையங்களை அமைப்போம். இந்த மையங்களில் அரசிடமிருந்து பெறும் பிறப்பு–இறப்புச் சான்றிதழ் போன்ற பல்வேறு சேவைகளைப் பெறுவதற்கும், அரசு மற்றும் அரசுத் துறை நிறுவனங்களுக்குச் செலுத்தக்கூடிய கட்டணங்கள் போன்றவற்றைச் செலுத்தும் சேவைகளை ஒருங்கிணைத்தும், குறைகள் மற்றும் புகார்களைத் தீர்க்கக் கூடிய பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்தும் இந்த மையங்களின் வழியாகச் செயல்படுத்துவோம். இதனால் அரசு நிருவாகம் சீரமைக்கப்பட்டு மக்களுக்கான சேவையைச் சிறப்பாகச் செய்வதுடன், பொதுமக்களும் அதிக சிரமம் இன்றி தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வழிவகை ஏற்படும்.

## வறுமை ஒழிப்பு

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் புள்ளிவிவரங்கள் திரட்டப்பட்டு அக்குடும்பங்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள், சுகாதாரம் போன்றவற்றை உறுதி செய்வதுடன், வருமானத்திற்கு வழி வகுக்கக்கூடிய பொருளாதாரத் திட்டங்கள், குழந்தைகளின் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அனைத்துச் சேவைகளையும் பல்வேறு திட்டங்கள் மூலம் ஒருங்கிணைத்து வழங்கி, அவர்களின் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அத்தகைய குடும்பங்களை வறுமைக் கோட்டிற்குக் கீழிருந்து மீட்க நடவடிக்கை மேற்கொள்வோம்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு தற்போது வழங்கப்படும் ரூபாய் இரண்டரை இலட்சம் கடனுதவி; ரூபாய் நான்கு இலட்சமாக

உயர்த்தப்பட்டு அவற்றில் ரூபாய் இரண்டு இலட்சத்தை மானியமாக வழங்குவோம்.

வட்டாரம்தோறும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான தொழிற் பயிற்சி மையங்களும், பொருளாதார மேம்பாட்டிற்கு மூலப்பொருள்களைத் திரட்டி வழங்கவும், அவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை உரியவாறு விற்பனை செய்ய ஒருங்கிணைந்த வட்டார வள ஆதார மையங்களை (Integrated Block Resources Centre) அமைப்போம்.

## தடையில்லா மின்சாரம்

2006 முதல் 2011 வரை தொடங்கப்பட்ட பல்வேறு மின் உற்பத்தித் திட்டங்கள் 2012க்குப் பிறகு செயல்பாட்டிற்கு வரும்போது தமிழ்நாடு மின் உற்பத்தியில் உபரி மாநிலமாகத் திகழும். எதிர்கால தேவைக்கேற்ப புதிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கி, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கும் பிற தேவைகளுக்கும் தங்குதடையின்றி மின்சாரம் கிடைக்க வழி செய்வோம்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக்கூடிய சூரிய ஒளி மின் திட்டத்தை (Solar Energy) நடைமுறைப்படுத்தி, மின் உற்பத்தியைப் பெருக்குவோம்.

தற்போது விவசாயிகள், நெசவாளர்கள், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கும் இலவச மின்சாரத் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவோம்.

மத்திய அரசின் – மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை மேலும் செம்மைப்படுத்தி, வேளாண் உற்பத்திப் பணிகளுக்கும் விரிவுபடுத்துவோம்.

## அத்திக்கடவு–அவினாசி திட்டம்

பவானி ஆற்றில் உள்ள உபரி நீரை கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காகவும், விவசாயப் பணிகளுக்குப் பயனுறும் வகையிலும் அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீவிர முயற்சிகளை மேற்கொள்வோம்.

## நீர்வள மேம்பாட்டுத் திட்டம்

வெள்ள நீரை வறட்சிப் பகுதிகள் பயன்பெறும் வகையில் திருப்பி விடுதல், வீணாகக் கடலில் கலக்கும் உபரி நீரை வறட்சியானப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லுதல், கால்வாய்கள் வழியாக உபரிநீரை எடுத்துச் சென்று சிறிய நீர்த்தேக்கங்கள் அமைத்தல், செயற்கை நிலத்தடி நீரை செறிவூட்டல், தடுப்பணை அமைத்தல், நீர் உயர்நிலை மேம்பாலம் அமைத்தல் போன்ற அனைத்து மாவட்டங்களின் பாசனத் திட்டங்களையும், குடிநீர்த் திட்டங்களையும் கருத்தில் கொண்டு மாநிலம் தழுவிய நீர் மேலாண்மைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவோம்.

## மீனவர் நலன்

தற்போது இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் உற்பத்தி இழப்பினை ஈடு செய்யும் வகையில் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் வழியாக விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவது போல, இயற்கைச் சீற்றங்களால் மீன்பிடித் தொழில் பாதிப்புக்கு உள்ளாகும்போது, ஏற்படும் வருமான இழப்பையும் கணக்கிட்டு ஏழை மீனவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை அளிக்கும் புதிய காப்பீட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்தி, மீனவர் நலனை பாதுகாப்போம்.

தமிழகத்தில் மீன்பிடித் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மீன்பிடித் துறைமுகங்களையும், குளிர் பதனிடும் மையங்களையும் தேவையான பகுதிகளில் உருவாக்குவோம்.

மீன்பிடி தொழிலுக்கு உதவும் வகையில் பிற கிழக்காசிய நாடுகளில் உள்ளதைப் போல கடல் வாழ் உயிரின வளர்ப்பில் (Sea Farming) உரிய உதவிகள் செய்வோம்.

தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் தொடர்ந்து தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் குறித்து தி.மு.கழகம் கடுமையான முறையில் தனது கண்டனத்தைத் தெரிவித்து வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு இலங்கை அரசு இதுவரை உரிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. மத்திய அரசு உடனடியாக இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றினைக் காண வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துவோம்.

விசைப்படகு ஒன்றுக்கு மாதந்தோறும் 1500 லிட்டர் டீசல் மானிய விலையில் வழங்கப்படுகிறது. நாட்டுப் படகு மீனவர்களுக்கு 300 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இந்த அளவினை விசைப்படகு ஒன்றுக்கு 2000 லிட்டர் டீசல் அளவிற்கும், நாட்டுப் படகுக்கு 500 லிட்டர் மண்ணெண்ணெய் என்ற அளவிற்கும் உயர்த்தி மானிய விலையில் வழங்க வகை செய்வோம்.

## கச்சத் தீவு

இந்தியா இலங்கையுடன் 1974ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், மீன் வலைகளை உலர்த்துவதற்கும், தேவாலயங்களில் வழிபடுவதற்கும் இருந்த உரிமைகள் 1976ஆம் ஆண்டு திரும்பப் பெறப்பட்டன. இதன் காரணமாக, அடிக்கடி கச்சத் தீவு அருகே மீனவர்கள் கொல்லப்படுவதும், தாக்கப்படுவதும், சிறைப்

பிடிக்கப்படுவதும் தொடர் நிகழ்வுகளாக அதிகரித்து வருவதால், கச்சத் தீவைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்.

## கால்நடை வளம்

பால், முட்டை, இறைச்சி உற்பத்தியைப் பெருக்குவதற்காக தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கால்நடை வளத்தைப் பெருக்கும் ஒரு சிறப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். மகளிர் சுய உதவிக் குழுக்கள் இத்திட்டத்தில் பெரும் பங்கு வகிக்கக் கூடிய வகையில் கறவை மாடுகள், ஆடுகள் மற்றும் கோழிகள் வளர்ப்பு ஆகியவற்றைச் செய்திட மானியத்துடன் கூடிய கடன் உதவிகளை வழங்குவோம்.

மரபு சாரா எரிவாயு உற்பத்தியை ஊக்குவிக்க கால்நடை சாணத்தைப் பயன்படுத்தி, கிராமப்புற மக்களின் தேவைக்காக சாண எரிவாயு உற்பத்தி சாதனங்களுக்கான மானியம், உதவித் தொகை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்.

கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பற்றாக்குறையைப் போக்குவதற்குத் தேவையான நிதி, தொழில்நுட்ப உதவியை அளித்து கால்நடைத் துறை வழியாக மலைக் கிலுவைகள் போன்ற தீவன பயிர்கள் உற்பத்திப் பெருக்க திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்.

## மக்கள் நல்வாழ்வு

சென்னையில் இயங்கும் கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனை போன்று தமிழ்நாட்டின் மையப்பகுதியான திருச்சியிலும், மதுரையிலும் மன நல மருத்துவமனைகளை (Institute of Mental Health) தொடங்குவோம்.

சென்னை தாம்பரத்தில் இருப்பது போன்று மதுரையில் காசநோய்க்கான சிறப்பு சிகிச்சை மருத்துவமனை ஒன்றை உருவாக்குவோம்.

சிறுநீரகம் பாதிப்புக்குள்ளான நோயாளிகளுக்கு இலவச இரத்தச் சுத்திகரிப்பு (Dialysis) சிகிச்சை முறையை அனைத்து மாவட்ட மருத்துவமனைகள், அனைத்து மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏழைகளுக்கு இலவசமாகவும், மற்ற வருமான பிரிவினருக்கு குறைந்த செலவிலும் இந்தச் சிகிச்சை அளிக்க வசதிகளைச் செய்வோம்.

தனியார் மருத்துவமனைகள் மருத்துவச் சிகிச்சைக்காக நியாயமான கட்டணங்களை நிர்ணயம் செய்வதற்கு மருத்துவக் கட்டண ஒழுங்குமுறை ஆணையம் ஒன்றினை அரசின் சார்பில் அமைப்போம்.

பச்சிளம் குழந்தைகளைத் தாக்கும் கடுமையான நோய்களான மூளைக் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை போன்றவற்றைத் தடுக்கத் தடுப்பூசிகளை (rota virus vaccine, meningococcal vaccine, hepatitis vaccine) மாநில அரசின் சார்பில் இலவசமாக வழங்குவோம்.

மாவட்ட மருத்துவமனைகளில் (District Hospitals) உயிர் காக்கும் உயர் சிகிச்சை மையங்களை (Coronary Care Unit – CCU) அமைத்திடுவோம்.

மாவட்டந்தோறும் அரசு மருத்துவக் கல்லூரி என்ற இந்த அரசின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களில் விடுபட்டுப் போன மாவட்ட தலைநகரங்களில் மருத்துவக் கல்லூரிகளை அரசு சார்பாக ஏற்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும், அரசு மருத்துவ மனைகள் 500 படுக்கைகள் கொண்ட – அனைத்து வசதிகளுடன் கூடிய சிறப்பு மருத்துவமனைகளாக தரம் உயர்த்துவோம்.

அனைத்து வட்டார மருத்துவ மனைகளிலும் “எய்ட்ஸ்” பரிசோதனை செய்ய நடவடிக்கை மேற்கொள்வோம். மேலும் “எய்ட்ஸ்” நோயால் பாதிக்கப்

பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி, மருத்துவம், உணவு, உடை கிடைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

வருமுன் காப்போம் திட்டத்தை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தி, தடுப்பு மருத்துவத்திற்கு (Preventive Medicine) முக்கியத்துவம் தருவோம்.

## கலைஞர் காப்பீட்டுத் திட்டம்

உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை மேலும் சிறப்பாக தொடர்ந்து செயற்படுத்துவதோடு, சாலை விபத்துகளுக்கும் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் உடனடி மருத்துவ வசதி கிடைத்திட ஏற்பாடுகளை செய்வோம்.

எழுந்து நடமாட முடியாமல் அவதியுறும் மூத்த குடிமக்களுக்கு மாதம் ஒரு முறை மருத்துவர் வீட்டிற்கே சென்று மருத்துவப் பரிசோதனை, சிகிச்சை அளிக்கும் முறை மக்கள் நல்வாழ்வுத் துறையின் வழியாகச் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

## பள்ளிக்கல்வி

பள்ளிக் கல்விக் குறியீடுகளில் பின் தங்கியிருக்கும் மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு ஆசிரியர் நியமனம் உட்பட அனைத்துக் கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தி கற்றல் திறனை மேம்படுத்துவோம்.

சமச்சீர் கல்வி முறை கழக ஆட்சியில் சிறந்த முறையில் 2010ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வளர்ந்து வரும் அறிவியல், வாழ்வியல், தொழில்நுட்பப் பாடங்களையும், நுட்பங்களையும் அவ்வப்போது மேம்படுத்துவதற்கும், தொடர்ந்து கற்றல், கற்பித்தல் ஆகிய முறைகளைக் கண்காணித்து மேம்படுத்துவதற்காகவும் பல்கலைக்கழக, கல்லூரி, பள்ளி

ஆசிரியர்கள், அறிஞர்கள் கொண்ட ஒரு கல்விக் குழுவினை (Academic Council for Equitable Education) அரசின் சார்பில் அமைத்திடுவோம்.

தரமான இலவசக் கல்வியினை அனைவருக்கும் வழங்கும் வகையில் வரும் ஐந்தாண்டுகளில் தேவைக்கேற்ப தமிழகத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் – நடுநிலைப் பள்ளிகள் உயர் நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும் தகுதி உயர்த்துவோம்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டு தோறும் இரண்டு சீருடைகள் என்பதற்குப் பதிலாக, மூன்று சீருடைகள் இலவசமாக வழங்குவோம்.

பள்ளிக் கல்வி பயிற்றுவிக்கும் முறைகளில் பல ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதால் கல்வி கற்பிக்கும் முறைகளில் மாற்றங்கள் கொண்டு வருவோம்.

## உயர்கல்வி

அரசுக் கல்லூரிகளிலும், அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வகையில் பாடத்திட்டங்களைத் திருத்தி அமைத்து, ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சி அளித்து நூலக, ஆய்வக வசதிகளை மேம்படுத்தி கல்வித் தரத்தை மேலும் உயர்த்துவோம்.

அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் வேலை வாய்ப்புத்திறன்களை வளர்ப்பதற்காகத் தொழில் அமைப்புகளுடன் ஒப்பந்த அடிப்படையில் பணிப்பயிற்சியை அளிப்பதற்கான செயல் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

தமிழ்நாட்டில் பல்கலைக் கழகங்கள் இல்லாத மாவட்டங்களே இருத்தல் ஆகாது என்ற உயர் நோக்கத்தோடு எல்லா மாவட்டங்களிலும் புதிய பல்கலைக் கழகங்களை அமைப்போம்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் – வெளி நாட்டிற்குச் சென்று வேலை வாய்ப்புத் தேடுவதற்கு வசதியாக ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன், ஸ்பானிஷ், அரபிக், மென்டரின் போன்ற மொழிகளைக் கற்றுத் தர ஏற்பாடுகளை செய்வோம்.

வெளிநாட்டில் உள்ள முக்கிய பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகளை உருவாக்குவோம்.

அரசுக் கல்லூரிகளிலும், அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் தொழிற்கல்வி பயில வரும்; பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்க்கு முதலாம் ஆண்டிலேயே இலவசமாக "மடிக்கணினி" (Laptop) வழங்குவோம்.

அரசு பொறியியல் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களே இல்லை என்ற நிலையினை உருவாக்கவும், தொழில் நுட்பக் கல்வி வசதிகளை மேலும் அதிகப்படுத்தும் வகையிலும் தமிழகத்தில் அரசு பொறியியல் கல்லூரிகள் இல்லாத அனைத்து மாவட்டங்களிலும் புதிய அரசு பொறியியல் கல்லூரிகளை வரும் ஐந்தாண்டுகளில் உருவாக்குவோம்.

2004 முதல் 2009 வரை வழங்கப்பட்ட கல்விக் கடன்களுக்கான வட்டியை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை குறித்து பரிசீலனை செய்வோம்.

## மருத்துவக் கல்வி

அரசு மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் தொடர்ந்து அரசு மருத்துவக் கல்லூரிகளை நிறுவிடுவோம்.

மாவட்டந்தோறும் செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் அமைக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் இத்தகைய கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் புதிய செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளை தொடங்குவோம்.

## தொழில்கள்

அந்நிய நேரடி முதலீடுகளை மேலும் ஈர்த்து தொழில் வளர்ச்சியடையாத மாவட்டங்கள் குறிப்பாக தென் மாவட்டங்கள் மேலும் வளர்ச்சி பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்வோம்.

தொழில் துறை, பணித்துறைகளில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் சிறு, குறு தொழில் மற்றும் பணி நிறுவனங்கள் தொடங்குவதற்கான புதிய ஊக்கத் திட்டம் ஒன்றை செயல்படுத்துவோம்.

பெரும் தொழிற்சாலைகளை தொடங்குவதற்கான ஒற்றைச் சாளர முறையைப் பின்பற்றி அனைத்து அனுமதிகளையும் எளிதில் வழங்குவோம்.

சிறு, குறு நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சிக்காக திருச்சியில் பொறியியல் இயந்திரத் தொழில்களுக்கும் – கடலூரில் துணி, இரசாயனத் திற்கும் – கோவையில் வார்ப்படத் தொழில்கள் மற்றும் மோட்டார் உதிரி பாகங்களுக்கும் ஆன தொழில் மையங்களை உருவாக்குவோம்.

## சேதுக்கால்வாய்த் திட்டம்

தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கையான சேதுக் கால்வாய்த் திட்டம் நாம் தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாக 02.07.2005 அன்று

தொடங்கப்பட்டு பணிகள் நிறைவடையும் நேரத்தில் மதக்காரணங்களைக் காட்டி, தடை செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை மத்திய அரசு காலந்தாழ்த்தாமல் நடத்தி முடித்து, இத்திட்டத்தை மீண்டும் தொடங்கி விரைவாக முடிக்க தொடர்ந்து பாடுபடுவோம்.

மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் மாநிலங்களுக்கு அளிக்கும் உரிமைத் தொகையை (ராயல்டி) தற்போதுள்ள நிலையில் இருந்து, இரு மடங்காக அதிகரித்து வழங்க வலியுறுத்துவோம்.

தென் மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு முக்கியமான முல்லைப் பெரியாறு பிரச்சினை உச்ச நீதி மன்றத்திலே நிலுவையிலே உள்ளது. அதைப் போலவே காவிரிப் பிரச்சினையிலும் நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகும் நடுவர் மன்றத்திலும், உச்ச நீதி மன்றத்திலும் இதுகுறித்த வழக்குகள் நிலுவையிலே உள்ளன. பாலாறு பிரச்சினையும் உச்ச நீதி மன்றத்திலே தான் உள்ளது. இவைகளுக்கெல்லாம் விரைவிலே தீர்வு காணவும், தமிழகத்தின் உரிமைகளைக் காக்கவும் மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று வலியுறுத்துவோம்.

தமிழகத்தின் ஆறுகள், ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், கால்வாய்கள் ஆகியவற்றில் துார்வாரும் பணியினைத் தொடர் திட்டமாக நிறைவேற்றுவோம்.

ஆண்டுதோறும் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் தமிழர் திருநாளாம் பொங்கல் நாளினையொட்டி விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கி அவர்களை ஊக்குவிப்போம்.

## போக்குவரத்து

மாநகரங்களின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குத் தற்போது கழக அரசு பெருநகர தொடர்வண்டித் திட்டத்தை (Metro Rail) சென்னையில் நடைமுறைப்படுத்தி வருவதுபோல், கோவை, மதுரை போன்ற பெரு நகரங்களிலும்

இது போன்ற திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

சென்னையிலிருந்து தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான மதுரை, கோவை ஆகிய நகரங்களுக்கு அதிவிரைவு தொடர்வண்டி (Bullet Train) இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

தற்போது கழக ஆட்சியில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ இரயில் திட்டத்தினை – மாமல்லபுரம் வரை நீட்டிப்பதற்கான ஒரு பாதையும் – தொழில் நகரமான திருப்பெரும்புதூர் வழியாக இருங்காட்டுக்கோட்டை வரை நீட்டிப்பதற்கான மற்றொரு பாதையும் ஏற்படுத்துவோம்.

கிராமப்புற மாணவர்கள், விவசாயிகள், வணிகர்கள் பயன்பெறும் வகையில் கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட சிறிய பேருந்துகளின் எண்ணிக்கையை (மினி பஸ் திட்டம்) அதிகமாக்கிட ஆவன செய்வோம்.

## மூத்த குடிமக்களுக்கு இலவசப் பேருந்து.

58 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மூத்த குடி மக்களுக்கும் அரசு உள்ளூர் பேருந்துகளில் கட்டணம் இல்லா இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவோம்.

முதியோர், ஆதரவற்ற பெண்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் சென்ற ஆண்டு 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து – அந்தத் தொகையை மேலும் உயர்த்தி மாதம் ஒன்றுக்கு 750 ரூபாயாக வழங்குவோம்.

## நெசவாளர் நலன்

நீண்ட காலக் கண்ணோட்டத்தில் நெசவுத் தொழில் நலியாமல் இருப்பதற்கு நெசவாளர்களுக்கு கச்சாப் பொருள்களும், முதலீட்டுப் பொருள்களும் பெறுவதற்கு அதிக கூட்டுறவுக் கடன்களை வழங்க அரசின் சார்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

கூட்டுறவு நெசவாளர்களுக்கு தற்போது மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் முதியோர் ஓய்வூதியத்தை 400 ரூபாயிலிருந்து 600 ரூபாயாக உயர்த்தி வழங்குவதோடு; கூட்டுறவு சங்கங்களில் தொடர்ந்து ஐந்தாண்டுகள் பணி புரிந்த 60 வயது நிறைவடைந்த அனைத்து நெசவாளர்களுக்கும் எண்ணிக்கை வரம்பின்றி ஓய்வூதியம் வழங்குவோம்.

கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் 100 யூனிட் என்பது 200 யூனிட்டாக உயர்த்தி வழங்குவோம்.

புதிதாக விசைத்தறி நிறுவனம் அமைப்பவர்களுக்கு விசைத்தறிகளை கொள்முதல் செய்வதற்கான வங்கிக் கடனுக்கு வட்டி மானியம் வழங்குவோம்.

தற்போது இயங்கி வரும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளை நவீன மயப் படுத்துவதோடு; மூடிக் கிடக்கும் 13 கூட்டுறவு நூற்பாலைகளில் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளை திறந்து இயக்கிட நடவடிக்கை மேற்கொள்வோம்.

பட்டுத் துணிகளின் விற்பனையை அதிகரித்திடவும் பட்டு நெசவாளர் களுக்கு ஊக்கம் அளித்திடவும் ஆண்டு முழுதும் உச்ச வரம்பின்றி 10 சதவிகித சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்குவோம்.

## சாயப்பட்டறை பிரச்சினை

திருப்பூர், கரூர், ஈரோடு போன்ற பகுதிகளில் பின்னலாடை நிறுவனங்கள் மூலம் வெளியேற்றப்படும் சாயக் கழிவினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தகுந்த தீர்வாக, இயற்கை முறையைக் கையாண்டு அதிக உப்புத் தன்மை கொண்ட சாயக் கழிவு நீரை ஆவியாக்கும் முறையைப் பயன்படுத்த தீவிர முயற்சி மேற்கொள்வோம். இந்த முயற்சி வெற்றி பெற அரசின் சார்பில் அனைத்து உதவிகளும் செய்வோம்.

## சிறுபான்மையர் நலன்

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில்தான் பௌத்த மதத்தைத் தழுவிய தலித் மக்களுக்கு ஆதி திராவிடர் பெறுகிற அனைத்துச் சலுகைகளும், உரிமைகளும் அளிக்கப்பட்டது போல், தலித் கிறித்தவர்களும் ஆதி திராவிடர் பட்டியலில் இடம் பெறுவதற்கு மத்திய அரசிடம் வலியுறுத்துவோம்.

மாநிலத்தில் சிறுபான்மையினர் கல்வி ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பின்தங்கியுள்ள பகுதிகளில் குறிப்பாக சிறுபான்மை சமூகப் பெண்கள் பயனடையும் வகையில் சிறப்பு சலுகைகளுடன் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவோம்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் சிறுபான்மை சமுதாயத்தினர் உரிய பங்கினைப் பெறுவதற்கு ஏதுவாக, நீதியரசர் ரங்கநாத் மிஸ்ரா ஆணையத்தின் பரிந்துரைகளை விரைவில் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிலையங்களுக்கும், வழிபாட்டுத் தலங்களுக்கும் தேவையான பாதுகாப்பினை வழங்குவோம்.

இஸ்லாமிய மக்களின் நீண்டகால கோரிக்கையான இட ஒதுக்கீட்டுக் கொள்கையை ஏற்று 3.5 சதவிகிதம் அளித்தது தி.மு. கழக ஆட்சி தான். இந்த ஒதுக்கீட்டு அளவினை மேலும் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை குறித்து பரிசீலிப்போம்.

## ஆதி திராவிடர் நலன்

கழக ஆட்சி அமையும் போதெல்லாம் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு உரிய இடஒதுக்கீட்டின் பங்கினை நடைமுறைப்படுத்தி பின்னடைவு காலிப் பணியிடங்களை (Backlog vacancies) நிரப்பி வரும் அணுகுமுறையை தொடர்ந்து கடைபிடிப்போம்.

தனியார் துறை நிறுவனங்களில் ஆதி திராவிட மலைவாழ் மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்ட முன் வடிவை மத்திய அரசு கொண்டு வர வலியுறுத்துவோம்.

மத்திய அரசில் பணியாற்றும் இதர பின்தங்கியோர் பிரிவு அரசு ஊழியர்களுக்கு இதுபோன்ற சட்ட முன்வரைவு (OBC Reservation in Posts and Services Bill) கொண்டு வரப்படும் என்று நாடாளுமன்றத்தில் அளித்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்துவோம்.

ஆதிதிராவிட, பழங்குடியினர் நலத்துறை நடத்தும் பல மாணவர் விடுதிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவோம். இம்மாணவர்களுக்கு உணவுக்காகச் செலவிடப்படும் உணவுக் கட்டணம் விலைவாசி உயர்வுக்கேற்றவாறு அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு உயர்த்திக் கொடுக்க ஆவன செய்வோம்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உயர் ஆய்வுப் பட்டங்களுக்கு (Ph.D) ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்கு தற்போது இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களிலும்

பி.எச்டி பட்டத்திற்கான இடஒதுக்கீடு முறையைப் பின்பற்ற அரசின் சார்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்வோம்.

ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு தனியார் துறையில் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு ஏற்ற சட்ட விதிமுறைகளை வகுத்து நடைமுறைப் படுத்திட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துவோம்.

அந்தந்த மாநிலங்களில் வாழும் ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக்கேற்ப இட ஒதுக்கீட்டு அளவை அந்தந்த மாநிலங்களே நிர்ணயித்துக் கொள்ளும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட மத்திய அரசை வலியுறுத்துவோம்.

ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் நல ஆணையம் ஒன்று அமைப்போம்.

மனிதக் கழிவை மனிதனே அகற்றும் அவல நிலையை முற்றிலும் ஒழிக்க தி.மு. கழக ஆட்சியில் உறுதி பூண்டு அந்தத் தொழிலிலே ஈடுபட்டோருக்கு மாற்றுத் தொழில் புரிய நிதியுதவி மற்றும் பயிற்சி அளித்தல் – அவர்களுக்காக துாய்மைப் பணி புரிவோர் நல வாரியம் அமைத்தல் – கழிவு நீர் அடைப்புகளை அகற்ற இயந்திரங்கள் பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற முற்பட்டதைப் போலவே – அதனைத் தொடர்ந்து சாக்கடைகளை சுத்தம் செய்ய அவற்றில் இறங்கி – மூழ்கி – அதன் காரணமாகவே சில கொடிய வாயுக்கள் தாக்கி உயிரிழக்கின்ற சம்பவங்கள் நேர்வதை மனதிலே கொண்டு, சாக்கடைகளை சுத்தம் செய்ய நவீன இயந்திரங்களைப் பயன்படுத்த முனைவதோடு, அந்தப் பணியிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கும் மாற்றுப் பணிகளை அளிப்பதற்கான முயற்சியிலே ஈடுபடுவோம்.

அனைத்துச் சமுதாயத்தினராலும், ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்த திருநங்கைகளுக்கு தி.மு. கழக ஆட்சியில் தான் நல வாரியம் அமைத்து, குடும்ப

அட்டைகள் வழங்கி  சமூகத்தில் ஒரு அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்தோம். அவர்களின் நலன்களை மேலும் பாதுகாக்கத் தக்க வகையில் அவர்களுக்கு தனியாக சுய உதவிக் குழுக்களை அமைத்துத் தருவதோடு – அவர்களுடைய எஞ்சிய கோரிக்கைகளையும் முறைப்படி பரிசீலித்து முடிவுகள் மேற்கொள்வோம்.

## வணிகர் நலன்

சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடுகளை அனுமதிப்பதால் கோடிக்கணக்கான சிறு வணிகர்களும், அதனை நம்பியுள்ள தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள். எனவே, சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடுகளை அனுமதிக்க கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்துவோம்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையேற்றத்திற்கும், தட்டுப்பாட்டிற்கும் முன்பேர ஊக வணிகம் காரணமாக அமைவதால் இதைத் தடை செய்வதற்கு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

வெள்ளம், தீ போன்ற இயற்கைச் சீற்றங்களாலும், கலவரங்களாலும் பாதிப்புக்குள்ளாகும் வணிகர்களுக்கு, வணிகர் நல வாரியத்தின் மூலம் நிவாரணம் அளித்திடத் தேவையான திட்டங்கள் செயல்படுத்துவதோடு, மருத்துவ உதவிகளும் வழங்கு ஆவன செய்வோம்.

## கலைஞர் வீடு வழங்கும் திட்டம்

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் தற்போது கான்கிரீட் வீடுகள் கட்ட வழங்கப்படும் உதவி மானியமான வீடு ஒன்றுக்கு தலா 75 ஆயிரம் ரூபாய் என்பது ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்படும்.

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் ஏற்கனவே அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட அத்தனை குடும்பங்களுக்கும் காங்க்ரீட் வீடுகள் கட்டித் தரப்படும்.

இந்த வீடுகளைப் பெற சிலருக்கு தகுதியில்லை என்ற நிபந்தனையும் மறுபரிசீலனை செய்யப்படும்.

அரசால் நிலங்கள் பல்வேறு காரணங்களுக்காக கையகப்படுத்தப் படுகின்ற நேரத்தில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை இரட்டிப்பாக்கி வழங்குவதுடன் வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பும், நிலங்களில் அமையும் தொழிற்சாலைகளில் நில உரிமையாளர்கள் பங்குதாரர்களாகவும் ஆகி பயன்பெறத் தக்க வகையில் நில எடுப்பு வழிமுறைகளை மாற்றி அமைப்போம்.

அரசு அலுவலகங்களிலும் உள்ளாட்சி அமைப்புகளிலும் லஞ்சம், முறைகேடு போன்றவை ஏற்படாமல் நடவடிக்கை மேற்கொள்ள ஆங்காங்கு கண்காணிப்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டு, எழுப்பப்படும் புகார்கள் அதற்காக அமைக்கப்படும் சிறப்பு தீர்ப்பாயத்தின் மூலம் உடனடியாக விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் தாமதமின்றி தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் வருகின்ற முதல் பட்டதாரிகளுக்கு அரசு பணிகளில் முன்னுரிமை தருவோம்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிக்கப்படுவதுடன், சென்னையில் உள்ள அடையாறு, கூவம் போன்ற நதிகளும் தூய்மைப்படுத்தப்படும்.

சென்னை நகர நெரிசலைக் குறைக்க சென்னைக்கு அருகில் புதிய சென்னை துணை நகரம் ஒன்றை உருவாக்குவோம்.

நகரங்களில் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினைச் சேர்ந்தவர்கள் பயனடையத் தக்க விதத்தில் அரசால் அறிவிக்கப்படும் இடங் களில் தனியார் நிறுவனங்களைக் கொண்டு குறைந்த செலவிலான வாடகைக் குடியிருப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்துவோம்.

## மாற்றுத் திறனாளிகள் நலன்

எல்லா கல்வி நிறுவனங்களிலும் உள்ள விடுதிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தி விடுதிகளில் தங்கும் வசதிகளை உருவாக்குவோம்.

மாற்றுத் திறனாளிகள் எளிய முறையில் பயன்படுத்தும் வகையில் இனி கட்டப்படும் அனைத்துப் பொதுக் கட்டிடங்கள், அரசு கட்டிடங்கள் உரிய முறையில் வடிவமைக்கப்படுவதை கட்டாயமாக்கி சட்டம் இயற்றுவோம்.

## பெருநகர மேம்பாட்டுத் திட்டம்

சென்னை உட்பட பெருநகரங்களின் அருகில் புதிய பெரிய ஏரிகள் உருவாக்கி குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்வோம்.

மாநகராட்சி, நகராட்சிகளில் குடிசைப் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற வீடுகளுக்குப் பதிலாக பாதுகாப்பான வீடுகளை கட்டித் தருவோம்.

பேரூராட்சி பகுதிகளில் கணக்கெடுக்கப்பட்டுள்ள இரண்டரை இலட்சம் குடிசைகளுக்குப் பதிலாக கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பாதுகாப்பான காங்க்ரீட் வீடுகளை கட்டித் தருவோம்.

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளிலும் பிற நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலும் சாலைகள், குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, கழிவு நீர் அகற்றுதல் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஒரு சிறப்புத் திட்டம் வகுத்துச் செயல்படுத்துவோம்.

கிராமப்புற பகுதிகளில் உள்ள நவீன வசதிகளைக் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களைப் போல நகர்ப் பகுதிகளிலும் நவீன ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்போம்.

கிழக்கு கடற்கரைச் சாலை பாண்டிச்சேரி வரை நான்கு வழிச் சாலையாக மாற்றுதல் – ராஜீவ் காந்தி சாலையில் தொடர் மேம்பாலங்கள் – எண்ணூர் துறை முகத்தை சென்னை வெளி வட்ட சாலையுடன் இணைக்கும் இணைப்புச் சாலை போன்ற கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கும் சாலைகளை அமைத்திடுவோம்.

தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கத் தேவையான அடிப்படை கட்டமைப்புகளுடன் கூடிய சென்னை – பெங்களூரு – மதுரை – கன்னியாகுமரி போன்ற சிறப்பு வழித்தடங்களை (Dedicated corridor) ஏற்படுத்துவோம்.

கந்து வட்டி என்ற பெயரால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுவதை மனதிலே கொண்டு, அந்தக் கொடுமை நீங்க வழிவகை காண்போம்.

## திருக்கோயில் நிலங்கள்

திருக்கோயில்களின் நிலங்களிலிருந்து சேரவேண்டிய குத்தகையை காலந்தவறாமல் முறைப்படுத்தி வசூல் செய்வதோடு; திருக்கோயில்களுக்குச் சொந்தமான காலி இடங்களைப் பாதுகாப்பதற்கும், திருக்கோயில்களுக்கு நல்ல வருவாய் ஈட்டக்கூடிய வகையில் பயன்படுத்துவதற்கும் ஏதுவாக, “நில வங்கி’’ (Land Bank) ஒன்றை நிறுவுவோம். மேலும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகளில் நீண்டகாலமாகக் குடியிருப்போர், அந்த மனைகளை தங்களுக்கு கிரையம் செய்து தரவேண்டுமென்று கேட்டு வருவது குறித்து; சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு, பரிசீலித்துப் பரிந்துரை வழங்கிட, உயர்நிலைக் குழு ஒன்றினை அமைப்போம்.

## அரசு அலுவலர்கள் நலன்

அரசு அலுவலர்களின் குறைகளை அவ்வப்போது களைந்திடவும், அரசு ஊழியர் சங்கங்களின் முறையீடுகளைக் கேட்டு, உரியகாலத்தில் தீர்வு காணவும், ஆணையம் ஒன்றினை அமைப்போம்.

ஆறாவது ஊதியக் குழு மற்றும் ஒருநபர் குழுவினால் களையப்படாமல் எஞ்சியிருக்கும் முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகளை விரைவாகக் களைவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

மார்ச், ஜுன், செப்டம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களின் இறுதியில் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறுவோர்க்கு ஆண்டு ஊதிய உயர்வு தற்போது கிடைப்பதில்லை. அந்த நிலையைத் தவிர்த்திட, இனி அந்த நான்கு மாதங்களின் கடைசி வாரத்தில் ஓய்வு பெறுவோர்க்கு ஆண்டு ஊதிய உயர்வு வழங்கிடுவோம்.

அரசுப் பணியில் உள்ள பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு தற்போது 3 மாதங்கள் என்றிருப்பதை; தாய்–சேய் நலன், பராமரிப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு 4 மாதங்களாக உயர்த்தி வழங்குவோம். அரசுப் பணியில் உள்ள மகளிர்க்கு அனைத்து அலுவலகங்களிலும் தேவையான வசதிகளுடன் கூடிய ஓய்வறை உருவாக்குவோம்.

## பொது விநியோகத் திட்டம்

ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம் – துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், செறியூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றை மானிய விலையில் வழங்கும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தை தொடர்ந்து செயல் படுத்துவோம்.

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள பரம ஏழைகளான அந்தியோதயா குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது மாதந்தோறும் கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வழங்கப்படும் 35 கிலோ அரிசியை இனி இலவசமாகவே வழங்குவோம். இதன் மூலம் தமிழகத்திலே உள்ள சுமார் 18.64 லட்சம் குடும்பங்கள் பயனடைவார்கள்.

குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ அயோடின் கலந்த உப்பு மானிய விலையில் வழங்குவோம்.

விடுபட்ட பயனாளிகள் அனைவருக்கும் தொடர்ந்து இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகளை வழங்குவோம். அதுபோலவே இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்படும் என்ற அடையாள அட்டை பெற்ற அனைவருக்கும் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்குவோம்.

## கடத்தலை ஒழிப்போம்

ஆற்று மணல் கடத்தல், அரிசி கடத்தல் போன்றவைகளை அடியோடு ஒழிப்பதற்கு – எத்தகைய முயற்சிகள் எடுத்தாலும் தொடரும் நிலைமையே உள்ளது. எனவே அத்தகைய தீமைகள் நடைபெறாமல் இருப்பதற்கும், கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை கடுமையாக தண்டிப்பதற்கும் சட்ட ரீதியான வழி வகைகளை காண்போம்.

## பனை, தென்னை விவசாயிகள் நலன்

இளநீர், பதநீர் போன்றவற்றின் விற்பனையை ஊக்கப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் சிவசுப்ரமணியம் கமிஷனுடைய பரிந்துரைகளைப் பரிசீலித்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்வோம்.

இளநீர், பதநீர் போன்ற தென்னை, பனை பொருள்களை பதப்படுத்து வதற்கும், உரிய கலன்களில் அடைத்து விற்பனை செய்வதற்கும் தொழிற்சாலைகள் உருவாக, அரசின் சார்பில் ஆவன செய்வோம்.

## முன்னாள் ராணுவத்தினர் நலன்

முன்னாள் இராணுவத்தினர் குடும்பத்தினரின் நல்வாழ்விற்காக குழு ஒன்று அமைத்து ஆய்வு செய்து அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வு காண்போம்.

## சுற்றுலா வளர்ச்சி

முக்கிய சுற்றுலா நகரங்களான மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, திருவரங்கம், செஞ்சி, ராமேஸ்வரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், தரங்கம்பாடி ஆகிய இடங்களில் சிறப்பு உள்கட்டமைப்பு வசதி அமைக்க உதவிப் பணிகள் மேற்கொண்டு சிறந்த சுற்றுலா தலங்களாக அவைகளை உருவாக்குவோம்.

## நலத் திட்ட உதவிகள்

தமிழக அரசின் சார்பில் ஏழைப் பெண்கள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபாய் உதவி நிதியினை 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவோம்.

அதுபோலவே தற்போது கர்ப்பிணிப் பெண்களுக்கு தலா 6000 ரூபாய் வீதம் வழங்கப்படும் உதவித் தொகையை 10000 ரூபாயாக உயர்த்தி வழங்கு வோம்.

தாய்மார்களின் சிரமங்களைப் பெரிதும் அறிந்துள்ள தி. மு. கழகம் கடந்த முறை அவர்களுக்காக இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்கியது போல – இந்த முறை அவர்களுக்காக இலவசக் கிரைண்டர் அல்லது மிக்சி என்ற இரண்டில் ஒன்றை அவர்களது விருப்பம் போல வழங்கும் திட்டத்தை தொடங்கி செயல்படுத்துவோம்.

## அறிவிப்புகள்!

### முத்திரை பதிக்கும் முத்தான திட்டங்கள்

- ❖ தாய்மார்களின் சிரமங்களைக் குறைக்க கிரைண்டர் அல்லது மிக்சி இலவசமாக வழங்குவோம்.
- ❖ பரம ஏழைகளான அந்தியோதயா குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 35 கிலோ அரிசி இலவசமாக வழங்குவோம்.
- ❖ கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் உதவி மானியம் 75 ஆயிரம் ரூபாய் என்பது ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.
- ❖ திருமண நிதி உதவியை 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவோம்.
- ❖ கர்ப்பிணிப் பெண்களுக்கான நிதி உதவியை 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவோம்.
- ❖ முதியோர் உதவித் தொகையை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்துவோம்.
- ❖ மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழங்கப்படும் இரண்டரை லட்சம் ரூபாய் கடன் உதவி நான்கு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, அவற்றில் இரண்டு லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.
- ❖ நகரங்களில் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு குறைந்த வாடகையில் குடியிருப்புத் திட்டம் செயல்படுத்துவோம்.
- ❖ முதல் பட்டதாரிகளுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை.
- ❖ குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ அயோடின் கலந்த உப்பு மானிய விலையில் வழங்குவோம்.
- ❖ மகப்பேறு விடுப்பு 3 மாதங்கள் என்பது 4 மாதங்கள் என உயர்த்துவோம்.
- ❖ உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்துவோம்.
- ❖ ஏழை மீனவர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம்.

❖ மூத்த குடிமக்களுக்கு அரசு உள்ளூர் பேருந்துகளில் இலவசப் பஸ் பாஸ்

❖ நியாயமான உற்பத்திச் செலவின் அடிப்படையில் விவசாயப் பொருள்களை கொள்முதல் விலையை நிர்ணயிப்போம்.

❖ வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தினரை – வறுமைக் கோட்டிற்கு மேல் வருவாய் உள்ளவர்களாக உயர்த்துவோம்.

❖ பொதுமக்களுக்கான சேவைகளை வழங்க வட்ட அளவிலும், கோட்ட அளவிலும் சேவை மையங்களை ஏற்படுத்துவோம்.

❖ உழவர்களுக்குத் தேவையான இடுபொருட்களை “உழவர் நண்பன் ஊர்திகள்” மூலமாக கிராமங்களுக்கே கொண்டு சென்று மானிய விலையில் வழங்குவோம்.

❖ வசூலிக்க இயலாத பண்ணை சாராத கடன், கடனுக்கான வட்டி, படிப்படியாக தள்ளுபடி செய்வோம்.

❖ இலவச மின்சாரத்தை தென்னை வளர்ப்பு, தோட்டக்கலை பயிர்களுக்கு விரிவுபடுத்துவோம்.

❖ அனுமதி பெறாமல் விளை நிலங்களை வேறு பயன்பாட்டிற்கு மாற்றுவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்போம்.

❖ விவசாயிகளின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக சிறப்புத் திட்டம் செயல்படுத்துவோம்.

❖ ஈழத் தமிழர் இன்னல் களைய தொடர்ந்து பாடுபடுவோம்.

❖ நீதி மன்ற மொழியாக தமிழை அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

❖ கல்வியை மாநிலப் பட்டியலில் சேர்க்க அரசமைப்புச் சட்டத் திருத்தம் கோருவோம்.

❖ கந்த வட்டி கொடுமை நீங்க வழி காண்போம்.

❖ நெசவாளர்கள் கச்சாப் பொருள்களும், முதலீட்டுப் பொருள்களும் பெற கூட்டுறவு கடன்களை வழங்குவோம்.

❖ தலித் கிறித்தவர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற மத்திய அரசிடம் வலியுறுத்துவோம்.

- ❖ தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் நல ஆணையம் அமைப்போம்.
- ❖ சாக்கடைகளை சுத்தம் செய்வோருக்கு வேறு மாற்றுப் பணி வழங்கிடுவோம்.
- ❖ திருநங்கைகள் வாழ்வில் ஒளியேற்ற தனியாக சுய உதவிக் குழுக்களை அமைப்போம்.
- ❖ சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடுகளை அனுமதிக்கக் கூடாதென மத்திய அரசை வலியுறுத்துவோம்.
- ❖ அரசு அலுவலர்களின் குறைகளைக் களைய நிரந்தரஆணையம் அமைப்போம்.
- ❖ பள்ளி மாணவர்களுக்கு இரண்டு சீருடைகள் என்பதற்குப் பதிலாக மூன்று சீருடைகள்.
- ❖ மெட்ரோ ரயில் திட்டத்தை விரிவுபடுத்துவோம்.
- ❖ சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிலையங்களுக்கும், வழிபாட்டுத் தலங்களுக்கும் பாதுகாப்பு வழங்குவோம்.
- ❖ இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீட்டளவை உயர்த்துவது பற்றி பரிசீலிப்போம்.
- ❖ பனை, தென்னை விவசாயிகள் நலன் காக்க சிவசுப்ரமணியம் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப் பரிசீலிப்போம்.
- ❖ முதியோர் உதவித் தொகையை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்துவோம்.
- ❖ கர்ப்பிணிப் பெண்களுக்கான நிதி உதவியை 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவோம்.
- ❖ திருமண நிதி உதவியை 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவோம்.
- ❖ கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் உதவி மானியம் 75 ஆயிரம் ரூபாய் என்பது ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.
- ❖ பரம ஏழைகளான அந்தியோதயா குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 35 கிலோ அரிசி இலவசமாக வழங்குவோம்.

❖ தாய்மார்களின் சிரமங்களைக் குறைக்க கிரைண்டர் அல்லது மிக்சி இலவசமாக வழங்குவோம்.

## இணைப்பு :

### மத்திய அரசில் தி.மு.க. இடம் பெற்று தமிழகத்திற்கு கொண்டு வந்த திட்டங்கள்

- தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் வழியாக 33 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழகத்தின் முக்கிய நகரங்களை இணைக்கும் நான்கு வழி, ஆறு வழிப் பாதைகளும், மிகப் பெரிய மேம்பாலங்களும் அமைக்கப் பட்டுள்ளன.
- தமிழ் நாட்டில் அமைந்துள்ள சென்னை, தூத்துக்குடி, எண்ணூர் துறைமுகங்களில் விரைந்து சரக்குகளைக் கையாள்வதற்கு 23 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கப் பணிகள் நிறைவேற்றப்பட்டு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப் பட்டுள்ளது.
- சேலம் உருட்டாலை 1553 கோடி ரூபாய் செலவில், தரத்தில் பன்னாட்டு அளவிற்கு உயர்த்தப்பட்டு புதிய உருட்டாலை நிறுவப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் நோக்கியா நிறுவனம் நிறுவப்பட்டு ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.
- ஒரகடத்தில் 1400 கோடி செலவில் வாகன சோதனை ஆய்வு மையம் நிறுவப்பட்டுள்ளது.
- தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம் தாம்பரத்தில் அமைக்கப்பட்டு நோய் தீர்க்கும் பணிகளைத் தமிழக மக்களுக்கு ஆற்றி வருகிறது.

- சென்னைக்கு அருகே உத்தண்டியில் உலகத்தரம் வாய்ந்த தேசியக் கடல்சார் பல்கலைக்கழகம் (National Marine University) அமைக்கப்பட்டு சிறந்த முறையில் இயங்கி வருகிறது.
- திருவாரூரில் மத்திய பல்கலைக் கழகம் (Central University) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- திருச்சியிலும் கோவையிலும் இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM) அமையவுள்ளது.
- நெசவாளர்கள் பயனுறும் வகையில் சென்வாட் வரி நீக்கப்பட்டுள்ளது.
- சேலத்தில் புதிய இரயில்வே மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது.
- 120 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- சென்னை விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டு அண்ணா பன்னாட்டு முனையம், காமராசர் உள்நாட்டு முனையம் ஆகியவற்றில் நவீன வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.
- சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பணிகள் விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.
- மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## 1967 முதல் 1969 வரை

- "மெட்ராஸ் ஸ்டேட்" என்பதற்குத் "தமிழ்நாடு" என்ற பெயர்
- சுயமரியாதைத் திருமணச் சட்டம்
- தமிழ், ஆங்கிலம் மட்டுமே என்ற இரு மொழித் திட்டம்
- அரசு ஊழியர்கள் தங்கள் விடுப்பைச் சரணளித்து ஈடான ஊதியம் பெறும் "ஈட்டிய விடுப்புச் சரணளிப்பு" திட்டம்.

## 1969 முதல் 1971 வரை

- பேருந்துகள் நாட்டுடைமை
- போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கம்
- அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் திட்டம்
- 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களை முக்கியமான சாலைகளோடு இணைக்க இணைப்புச் சாலைகள் திட்டம்
- குடிசை மாற்று வாரியம்
- குடிநீர் வடிகால் வாரியம்
- கண்ணொளி வழங்கும் திட்டம்
- பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம்
- கை ரிக்ஷாக்களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷாக்கள்
- ஊனமுற்றோர் நல்வாழ்வு திட்டம்
- தாழ்த்தப்பட்டோர்க்கு இலவச கான்கிரீட் வீடுகள்
- குடியிருப்பு மனை மற்றும் பண்ணைத் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டங்கள்
- இந்தியாவிலேயே முதன்முதலாக காவலர் ஆணையம் (Police Commission) அமைத்தது
- பிற்படுத்தப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் தனித்தனியாக அமைச்சகம்
- பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு அமைத்து அவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 25 விழுக்காட்டிலிருந்து 31 விழுக்காடாகவும், தாழ்த்தப்பட்டோர்க்கான இட ஒதுக்கீட்டை 16 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாகவும் உயர்த்தியது
- புகுமுக வகுப்பு வரையில் அனைவருக்கும் இலவசச் கல்வி
- மே தினத்திற்கு ஊதியத்தோடு கூடிய அரசு விடுமுறை

- நபிகள் நாயகம் பிறந்த நாளுக்கு அரசு விடுமுறை

## 1971 முதல் 1976 வரை

- இந்தியாவிலேயே முதன்முதலாக கோவையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம்
- அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்
- அரசு அலுவலர் இரகசியக் குறிப்பேட்டு முறை ஒழிப்பு
- மீனவர்களுக்கு இலவச வீட்டுவசதித் திட்டம்
- சிறார்களுக்கு ஆலயங்களில் கருணை இல்லங்கள்
- சேலம் உருக்காலைத் திட்டம்
- 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று நில உச்சவரம்புச் சட்டம்
- நெய்வேலி நிலக்கரி இரண்டாவது சுரங்கம் – மின் திட்டம்
- தூத்துக்குடி ரசாயன உரத் தொழிற்சாலை
- சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ)
- சிப்காட் வளாகங்கள்
- தமிழ் பேசும் முஸ்லீம்களைப் போலவே உருது பேசும் முஸ்லீம்களும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்
- புன்செய் நிலவரி அறவே நீக்கம்
- மக்கள் குறை தீர்க்கும் மனுநீதித் திட்டம்
- பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்
- கொங்கு வேளாளர் சமூகத்தினர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்
- பசுமைப் புரட்சித் திட்டம்

## 1989 முதல் 1991 வரை

- வன்னியர், சீர் மரபினர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்கு 20 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு
- தாழ்த்தப்பட்டோர்க்கு மட்டும் 18 விழுக்காடு, பழங்குடியினர்க்கு தனியாக ஒரு விழுக்காடு
- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும், வருமான வரம்பிற்குட்பட்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி
- தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கும், வருமான வரம்பிற்குட்பட்டு பெண்களுக்கும் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி
- வேளாண்மைக்கு இலவச மின்சாரம்
- பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம்
- அரசுப்பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு
- ஆசியாவிலேயே முதன்முதலாக கால்நடைப் பல்கலைக்கழகம்
- ஏழைப்பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம்
- விதவைகளுக்கு மறுமண உதவித் திட்டம்
- கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க நிதியுதவி
- நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்தது
- விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய ஊக்கத் தொகை; வண்டிச்சத்தம்
- நுகர் பொருள் வாணிபக் கழகத்தை நிறுவியது
- கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி
- மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக மாநில அரசு அலுவலர்களுக்கும் ஊதிய உயர்வு அளித்ததோடு, அதனை முன்தேதியிட்டு வழங்கியது.
- 10 இலட்சம் மகளிர் பயன்பெறும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திட்டம்

- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அமைத்தது
- பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைத்தது
- டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் அமைத்தது
- காவிரி நடுவர் ஆணையம் அமைந்திட முயற்சித்தது

## 1996 முதல் 2001 வரை

- ஆட்சிப் பொறுப்பையேற்ற ஆறு மாதங்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல்
- உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு ஒதுக்கீடு
- இரண்டு பெண் மேயர்கள் உட்பட 44 ஆயிரத்து 143 பதவிகளில் பெண்கள் பதவி ஏற்பு, இரண்டு மேயர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்மணி
- "மெட்ராஸ்" என்பதற்கு "சென்னை" என்ற பெயர்
- பொறியியற் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர ஒற்றைச் சாளர முறை
- வெளிப்படையான புதிய தொழில் கொள்கை
- தொழில் தொடங்கிடத் தேவைப்படும் அனைத்து அனுமதிகளையும் ஒரே இடத்தில் வழங்கிட ஒற்றைச் சாளர முறை
- மேம்படுத்தப்பட்ட சாலைகள், புதிய புதிய பாலங்கள்
- கிராமங்களில் கான்கிரீட் தெருக்கள் அமைக்கும் திட்டம்
- ஆறுகள், குளங்கள், கால்வாய்களில் வரலாறு காணாத அளவுக்குத் தூர்வாருதல் திட்டம்
- 24 மணிநேரமும் இயங்கிவரும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள்
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்
- அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்

- கிராமப்புற மாணவர்களுக்குத் தொழில் கல்லூரிகளில் 15 விழுக்காடு இடஒதுக்கீடு
- சாதிப்பூசல்களை அகற்ற பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்
- கிராமப்புறங்களுக்கு மினி பஸ் திட்டம்
- அம்பேத்கர் பெயரில் இந்தியாவிலேயே முதல் சட்டப் பல்கலைக்கழகம்
- சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம்
- உலகத் தமிழர்களுக்கு உதவிடத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
- உருது அகாடமி
- சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்
- சென்னை – திரைப்பட நகருக்கு "ஜெ.ஜெ. திரைப்பட நகர்" என்றிருந்ததை மாற்றி "டாக்டர் எம்.ஜி.ஆர் திரைப்பட நகர்" என்று பெயர் மாற்றம்.
- உழவர் சந்தைகள் திட்டம்
- வருமுன் காப்போம் திட்டம்
- கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்
- பள்ளிகளில் வாழ்வொளித் திட்டம்
- தென் குமரியில் 133 அடி உயரத்தில் அய்யன் திருவள்ளுவர் சிலை
- சென்னையில் "டைடல் பூங்கா"
- அரசுக் கல்லூரி மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சித்திட்டம்
- அரசுக்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் குடியிருந்து வருவோர்க்கு வீட்டுமனை உரிமையாக்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ் இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள்
- 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு படித்து முடித்துச் செல்லும் போதே சாதிச் சான்றிதழ், வாழ்விடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் வழங்கும் திட்டம் 1999–2000 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது

- 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களது உயர் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும் திட்டம் 1996 முதல் நடைமுறை
- ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையம் சென்னைக் கோயம்பேட்டில் நிறுவிட வழிவகை செய்தது.
- தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்குச் சிறப்புத் திட்டம்
- சேமிப்புடன் கூடிய மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்
- விவசாயத் தொழிலாளர்களுக்குத் தனிநல வாரியம்
- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலவாரியம்
- தமிழ்ச் சான்றோர்களுக்கும், தியாகிகளுக்கும் மணிமண்டபம்
- பள்ளிச் சிறார்க்கு சத்துணவோடு முட்டை வழங்கியது
- இருபதுக்கும் மேற்பட்ட அணைக்கட்டுகள் கட்டியது
- ஒன்பது மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்குப் புதிதாகக் கட்டடங்கள்
- மதுரை மாநகரில் முதன்முதலாக உயர்நீதிமன்ற கிளை அமைத்து அதற்கான கட்டங்களையும், வேறு பல மாவட்டங்களில் புதிய நீதி மன்றக் கட்டடங்களையும் கட்டியது
- மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை
- அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
- நமக்கு நாமே திட்டம்
- நலிந்தோர் குடும்ப நலத் திட்டம்
- சென்னை பொது மருத்துவமனைக்கு 104 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம்
- 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களை மீண்டும் நியமனம் செய்தது
- முதன்முதலாக 10 ஆயிரம் சாலைப் பணியாளர்கள் நியமனம் செய்தது

- தமிழ்ச் சான்றோர் எழுதிய நூல்களை அரசுடைமையாக்கியது
- சென்னை நகரில் ஒன்பது மாநகராட்சி மேம்பாலங்கள் அமைத்தது
- ரூபாய் 1500 கோடி செலவில் 350 துணை மின் நிலையங்கள்
- ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்
- வேலூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள்

## 2006 முதல் 2011 வரை

- ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வீதம் மாதம் 20 கிலோ அரிசி; ஒரு கோடியே 85 இலட்சம் குடும்பங்கள் பயன்.
- மாதந்தோறும் குறைந்த விலையில் பாமாயில் எண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, மைதா செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு
- "மானிய விலையில் மளிகைப் பொருட்கள்" என 50 ரூபாய்க்கு 10 சமையல் பொருட்கள்
- 22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி
- வீடுகள் தோறும் இலவச வண்ண தொலைக்காட்சி பெட்டிகள்
- இலவச எரிவாவு இணைப்புடன் எரிவாயு அடுப்புகள்
- விவசாயிகளுக்கான பயிர்க்கடன் வட்டி ரத்து
- சாதா ரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 1050 ரூபாய், சன்ன ரக நெல் விலை 1100 ரூபாய்.
- மீண்டும் புதுப்பொலிவுடன் 117 உழவர் சந்தைகள், மேலும் புதிதாக 45 உழவர் சந்தைகள் அமைப்பு
- கரும்பு விவசாயிகளுக்குப் போக்குவரத்துக் கட்டணம் மற்றும் ஊக்கத் தொகை சேர்த்து டன் ஒன்றுக்கு ரூபாய் 2000.

- மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் புரட்சிகரமான திட்டத்தின்கீழ் 189 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டம்
- 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டம்
- விவசாயத் தொழிலாளர் நல வாரியம் உட்பட 31 அமைப்புச்சாரத் தொழிலாளர் நல வாரியங்களில் 2 கோடியே 2 இலட்சத்து 21 ஆயிரத்து 564 உறுப்பினர்கள் சேர்ப்பு
- 13 இலட்சத்து 6 ஆயிரத்து 492 அமைப்புச் சாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 616 கோடியே 43 இலட்சத்து 44 ஆயிரத்து 832 ரூபாய் உதவித் தொகை
- ஒரு கோடியே 58 இலட்சத்து 8 ஆயிரத்து 288 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள்
- காமராசர் பிறந்த நாளில் "கல்வி வளர்ச்சி நாள்" என பள்ளிகளில் கல்வி விழா
- சத்துணவுடன் வாரம் 5 நாள் முட்டைகள், வாழைப்பழங்கள்
- ஆண்டு தோறும் 24 இலட்சத்து 82 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும், 2 இலட்சத்து 99 ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ்.
- தொழிற்கல்வி படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு ரத்து.
- பத்தாம் வகுப்பு வரை பள்ளிகளில் தமிழ் மொழி கட்டாயப் பாடம் எனச் சட்டம் – தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை.
- நூற்றாண்டுக் கனவை நனவாக்கிச் செம்மொழித் தமிழாய்வு மையம் சென்னையில் அமைப்பு
- 4724 திருக்கோயில்களில் 523 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 1100 திருக்கோயில்களில் 100 கோடி ரூபாய் செலவில் குடமுழுக்கு.

- அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு ரூபாய் 277 இலட்சம் மதிப்பீட்டில் 10 ஆயிரம் மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமணத் திட்ட நிதியுதவி 10 ஆயிரம் என்பது 25 ஆயிரம் ரூபாய் என உயர்வு
- ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்குத் தலா 6 ஆயிரம் ரூபாய் வீதம் 20 இலட்சத்து 11 ஆயிரத்து 517 ஏழை மகளிர்க்கு நிதியுதவி
- அரசு ஊழியர்களுக்கு நான்காண்டுகளில் 2 இலட்சம் ரூபாய் வரை மருத்துவ உதவி வழங்கும் புதிய "மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்"
- "வரும் முன் காப்போம்" திட்டத்தின்கீழ் இதுவரை 18 ஆயிரத்து 742 முகாம்கள் நடத்தப்பட்டு ஒரு கோடியே 77 இலட்சத்து 5 ஆயிரத்து 8 பேர் பயன் பெற்றுள்ளனர்.
- இதய நோய், நீரிழிவு நோய், புற்று நோய்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்த உடல் பரிசோதனை செய்ய "நலமான தமிழகம்" திட்டம்.

- "உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" வாயிலாக இதுவரை 2 இலட்சத்து 70 ஆயிரத்து 265 ஏழை மக்களுக்கு 702 கோடி ரூபாய் செலவில் உயிர் காக்கும் அறுவை சிகிச்சைகள்.
- மத்திய அரசின் உதவியோடு "அவசரகால மருத்துவ ஊர்தி 108 இலவச சேவைத் திட்டம்" வழியாக இதுவரை 8 இலட்சத்து 8 ஆயிரத்து 907 பேர் பயன் பெற்றுள்னர். மேலும், 42 ஆயிரத்து 232 நபர்களின் உயிர் காக்கப்பட்டுள்ளது.
- ஏறத்தாழ 2 இலட்சத்து 22 ஆயிரத்து 569 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் 46 ஆயிரத்து 91 கோடி ரூபாய் முதலீட்டிலான 25 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு 37 புதிய தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கைகள்.

- 3 இலட்சத்து 5 ஆயிரத்து 801 படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 240 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- 4 இலட்சத்து 65 ஆயிரத்து 658 இளைஞர்களுக்கு அரசு அலுவலகங்களில் புதிய வேலை வாய்ப்புகள்.
- கோவை, திருச்சி, மதுரை, நெல்லை ஆகிய நகரங்களில் டைடல் பூங்காக்கள்.
- கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 500 ரூபாய் என உயர்த்தப்பட்டதால் கடும் மாற்றுத் திறனாளிகள் பத்தாயிரம் பேர் பயனடைந்து வருகின்றனர்.
- கழக அரசு தொடங்கிய மகளிர் திட்டத்தின் வழியாக இதுவரை உருவாக்கப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 41 ஆயிரத்து 311. இக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் ரூபாய் 6342 கோடி
- 2,033 கோடி ரூபாய் செலவில் 10 ஆயிரத்து 96 கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்
- அதே போல, அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 210 கோடி ரூபாய் செலவில் 420 பேரூராட்சிகளில் கட்டமைப்புப் பணிகள்
- 12 ஆயிரத்து 94 கோடி ரூபாய் செலவில் 57 ஆயிரத்து 787 கிலோ மீட்டர் நீளச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளும், பாரமரிப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- 4 ஆயிரத்து 945 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இருவழித் தடங்களாக அகலப்படுத்தப்பட்டுள்ளன.

- தலவரி, தலமேல் வரி, தண்ணீர் தீர்வை அனைத்தும் ரத்து. நில உரிமையின் அடையாளமாக நிலவரி மட்டும் ஏக்கர் ஒன்றுக்கு புன்செய் நிலங்களுக்கு 2 ரூபாய், நன்செய் நிலங்களுக்கு 5 ரூபாய்.
- கட்டணம் உயர்த்தப்படாமல் 12 ஆயிரத்து 137 புதிய பேருந்துகளுடன் மேலும் 300 புதிய பேருந்துகள்.
- இசுலாமியர் சமுதாயம் மேன்மை பெற 3.5 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு.
- அருந்ததியினர் சமூகத்தின் அவலம் தீர 3 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு.
- சமத்துவ சமுதாயம் காணும் நோக்கில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம்
- சாதி பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்க ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 145 பெரியார் நினைவு சமத்துவ புரங்களுடன் மேலும் 95 சமத்துவபுரங்கள்
- சென்னை கோட்டூர்புரத்தில் உலகத்தரத்தில் 171 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்.
- 1200 கோடி ரூபாய் செலவில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்ற–தலைமைச் செயலக வளாகம்.
- 100 கோடி ரூபாய் செலவில் அடையாறு தொல்காப்பியர் பூங்கா.
- சென்னையின் மையப் பகுதியில் செம்மொழிப் பூங்கா.
- வட சென்னை மீஞ்சூரில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்.
- தென் சென்னையில நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்.
- ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் 14 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மெட்ரோ இரயில் திட்டம்
- ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி உதவியுடன் 1929 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒக்கேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- 630 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம்–பரமக்குடி கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றம்.

- டெஸ்மா, எஸ்மா சட்டங்களை நீக்கி அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்குப் பறிக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் வழங்கப்பட்டு, 1.1.2006 முதல் தமிழகத்தில் ஆண்டுக்கு 5 ஆயிரத்து 155 கோடியே 79 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் 6வது ஊதியக் குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
- 21 இலட்சம் குடிசை வீடுகளை 6 ஆண்டுகளில் கான்கீரிட் வீடுகளாக மாற்றும் “கலைஞர் வீடு வழங்கும் திட்டம்”
- பத்திரிக்கையாளர்கள் ஓய்வூதியம் ரூபாய் 4000லிருந்து 5000ஆக உயர்த்தியும், அவர்கள் குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 2000லிருந்து 2500 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- கோவையில் முதன்முதலாக உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 ஜுன் திங்களில் நடைபெற்றது.
- 119 புதிய நீதிமன்றங்கள் திறக்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்களின் கட்டமைப்பு வசதிக்காக ரூ.302 கோடி ஒதுக்கீடு
- 13ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாலை நேர, விடுமுறை நாள் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு நிலுவையிலுள்ள வழக்குகளைக் கணிசமாகக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது.
- சிறுபான்மையினர் நடத்தும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11,307 ஆசிரியர் பணியிடங்களையும் 648 ஆசிரியரல்லாத பணியிடங்களையும் நிரப்புவதற்கு ரூ.331 கோடி நிதி ஒதுக்கீடு.
- பள்ளிக் கல்வியில் கற்றல் முறையில் மாணவர்களை சம அளவில் மதிப்பீடு செய்யும் ஒரே சீரான பாடத்திட்டத்தையும், தேர்வு முறையையும் கொண்டு வந்து பள்ளிக்கல்வியில் சமச்சீர் கல்வி முறை.

- தனியார் பள்ளிகளில் அதிகக் கட்டணங்களை பெற்றோர்கள் மீது சுமத்துவதைத் தடுக்கும் வண்ணம் ஒரு நபர் நீதிபதிக் குழுவினை அமைத்து கட்டண சீராக்கம் செய்யப்பட்டு வருகிறது.
- அரசு, அரசு சார்ந்த நிறுவனங்களில் கடந்த ஐந்தாண்டுகளில் 6 இலட்சம் பேர் நிரந்தர வேலை பெற்றுள்ளனர்.

## முடிவுரை

திராவிட முன்னேற்றக் கழக அரசு இதுவரையிலே நிறைவேற்றியுள்ள வாக்குறுதிகளையெல்லாம் எண்ணிப் பார்த்து – இந்தத் தேர்தல் அறிக்கையில் கூறியுள்ள வாக்குறுதிகளையும் பட்டியலிட்டுப் பார்க்கும் என்னரும் தமிழ் மக்களாம் வாக்காளப் பெருமக்கள் நிறைந்த நம்பிக்கையோடு தி.மு. கழகம் சொன்னதைச் செய்யும் – செய்வதைத் தான் சொல்லும் என்ற உறுதியோடு அனைத்துப் பிரிவு மக்களும் ஆதரவுக் கரம் நீட்டி தி.மு. கழகக் கூட்டணியில் உள்ள கட்சிகளின் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வீர்களேயானால் – உங்களால் அமையும் அரசு தமிழகத்தின் வளம் மேலும் மேலும் சிறக்கவும் – நமது இந்தியத் திருநாட்டின் வலிவும் பொலிவும் நிறைந்த ஜனநாயகம் இந்த வையகம் எங்கும் புகழ் கொடி நாட்டவும் – மத்திய அரசுடன் மாநில அரசு உறவுக்கு கை கொடுத்து உரிமைக்குக் குரல் கொடுக்கும் உன்னத நோக்கத்தைச் செயல்படுத்தி ஒருமைப்பாடு காப்போம், இறையாண்மையை உறுதி செய்வோம் – இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்குமென்று தோள் உயர்த்தி – தொண்டாற்றி வெல்வோம் இந்த ஜனநாயகம் காத்திடும் அறப் போராட்டத்தில் எனச் சூளுரைத்து உங்களுக்காக உழைப்பதற்கு எங்களுக்கு உத்தரவிடுங்கள் என எல்லாப் பிரிவு மக்களையும் வேண்டிக் கேட்டுக் கொண்டு இந்தத் தேர்தல் அறிக்கையை உங்கள் இணையடி தொழுது வெளியிடுகிறேன்.

**அண்ணா வழியில் அயராது உழைப்போம்!**



**ஆதரிப்பீர் உதயசூரியன்!**

